# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

-70 Feb 2021 Email : theepamlink@gmail.com TP: 026 2221022 / 026 2054362 Rs. 30/=

## மறை மாநில ஆயரின் செய்தி

கிறிஸ்துவில் அன்புள்ள வாசகர்களுக்கு

புலர்ந்திருக்கும் புதிய ஆண்டு மனங்களிலும், இல்லங்களிலும் மகிழ்ச்சி, அமைதி, நற்சுகம், பாதுகாப்பை முழுமையாகத் தரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பயத்தோடும், சுய தனிமைப்படுத்தலோடும், செயல்பாடுகள் அற்ற நிலையிலும் 2020ம் ஆண்டு உருண்டோடிவிட்டது. 2021ம் ஆண்டும் எப்படிக் கழியுமோ எனும் கேள்வியோடும், தயக்கத்தோடும், வருடத்திற்கான நிகழ்ச்சிகளைத் தீர்மானிக்க முடியாத நிலையிலும் நாட்களைக் கடத்துகின்றோம். ஆயினும் இறையாசீரோடு நிலைமைகள் சீரடைய வேண்டுமென ஆசித்து செபத்தில் இணைந்திருப்போம்.

இவ்வாண்டு எமது திருஅவை இரண்டு தலைப்புகளைத் தாங்கி நிற்கின்றது.



**1. புனித யோசேப்பு ஆண்டு**

உலக திருஅவையின் பாதுகாவலராகப் பிரகடனப்படுத்திய 150 ம் வருட நிறைவை சிறப்பிக்க திருத்தந்தை பிரான்சிஸ் 8 டிசம்பர் 2020 முதல் 8 டிசம்பர் 2021 காலப்பகுதியை புனித யோசேப்பு ஆண்டு எனப் பிரகடனப்படுத்தினார். திருத்தந்தை பிரான்சிஸ் புனித யோசேப்புவை அன்புள்ள, பாசமுள்ள, கீழ்ப்படிவுள்ள ஏற்றுக்கொள்ளும் தந்தையாகவும், துணிவுள்ள பின்புலத்திலிருந்து செயல்பட்ட தந்தையாகவும் வர்ணிக்கின்றார். கோவிட் -19 பின்னணியில் இன்று உலகம் முழுவதும் பணிபுரியும் சாதாரண மக்களை நினைவுகூர்ந்து திருத்தந்தை "இவர்கள் ஆடம்பரங்களைத் தேடாமல் ஒப்பிடமுடியாத அளவிற்கு மீட்புச் சரித்திரத்தில் பங்கேற்ற புனித யோசேப்புவைப் போல் உள்ளனர்" என்று வர்ணிக்கின்றார். புனித யோசேப்புவின் சிறப்பான வாழ்வை நாமும் வாழ்ந்துகாட்ட முன்வருவோம்.

**2. அன்பிய ஆண்டு.**

இலங்கைத் திருஅவையில் 1996ம் ஆண்டை அன்பியங்களின் ஆண்டாக இலங்கை ஆயர் பேரவை பிரகடனப்படுத்தியதன் 25 வருட நிறைவில் இவ்வாண்டை (2021) மீண்டும் அன்பியங்களின் ஆண்டாக, ஆயர் பேரவை பிரகடனப்படுத்தியுள்ளது.

இவ் யூபிலி ஆண்டில் அன்பியங்களாக அல்லது சிறிய கிறிஸ்தவ குழுமங்களாக நாம் எவ்வாறு செயல்பட்டு சான்று பகரலாம் என சிந்தித்துச் செயல்பட அழைக்கப்படுகின்றோம். இறைவாக்கு வாசிப்பு, பகிர்வு, சமூகப் பணி என குழுவாக செயல்படவும் இறைவாக்கு வாசிப்பில் அதிக ஆர்வம் கொள்ளவும் அன்பியங்களின் செயல்பாடுகள் உதவுகின்றன. இவ்வாண்டில் பங்குத் தந்தையர்களின் இல்லத்தரிசிப்பு, தேவையில் இருப்போர் பற்றிய தெளிவும் செயல்பாடும் மிக முக்கியமானவை, இணைந்து செயல்படுவோம்.

கோவிட் -19 கொள்ளை நோயில் பாதிப்பு இலங்கையிலும் விசேடமாக திருகோணமலையிலும் அதிகமாக இருக்கும் இந்நிலையில் எமது பாதுகாப்பு, சுத்தம், சுகாதாரம் பற்றிய விழிப்பும் அக்கறையும் எமக்கு அதிகம் இருக்க வேண்டும். தெளிவோடு இருந்து எம்மையும் எம்மைச் சூழ உள்ளவர்களையும் பாதுகாப்போம்.

இவ்வருடம் இறையாசீர் நிறைந்த வருடமாக அமைய வாழ்த்தி முடிக்கின்றேன்.

கிறிஸ்துவில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்



## அன்பிய ஆண்டு
**Small Christian Communities**
**2021 / 01 / 16 - 2021 / 12 / 31**



## தவக்காலத்தின் முதல் நாள் - மாசி 17



'இறைவனின் பார்வையில் விலையேறப் பெற்ற தூசிகள் நாம். நம் வாழ்வை அழுக்காக்கும் தூசிகளை இறை ஒப்புரவின் வழியாக கழுவித்துடைப்போம்'.
– திருத்தந்தை பிரான்சிஸ்

பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்துவரும் இந்த பிரபஞ்சத்திற்கு முன் நாம் அனைவரும் தூசிகள். ஆயினும், நாம் இறைவனால் அன்புகூரப்பட்டுள்ள தூசிகள். கடினமான சூழ்நிலைகளிலும், தோல்வியிலும் துவண்டுபோகும் வேளைகளில் நாம், நம்மையே தூசியாக எண்ணுகிறோம். ஆயினும் அவ்வேளைகளில், நாம் இறைவனின் பார்வையில் விலையேறப்பெற்ற தூசிகள் என்பதையும் உணர்ந்து பார்க்க வேண்டும். அதேவேளை நம் வாழ்வு தூசிகளைத் துரத்திச் செல்லும் வாழ்வாக அமைந்து விடக்கூடாது. நிலையில்லாமல் கடந்து செல்லும் பணம், புகழ் போன்ற தூசிகளை நாம் துரத்திச் செல்வதை விடுத்து, நாம் இறைவனால் அன்புகூரப்படுபவர்கள். எனவே நிலையான வாழ்வுக்குச் சொந்தமானவர்கள் என்பதை உணரும் வரத்தை தவக்காலத்தில் பெற முயல்வோம். அழிவையும் போரையும் உருவாக்கும் இவ்வுலகில் நம்மைச் சுற்றி தூசியும், புழுதியும் நிறைந்துள்ளன. இந்த அழிவுக் கலாச்சாரத்திற்கு நாமும் உடன்பட்டு, நம்மையும், நம் குடும்பம், சமுதாயம் அனைத்தையும் அழிக்க முயல்கிறோம்.

நம் உள்ளங்களை அழுக்காக்கும் தூசிகளிலிருந்து நாம் கழுவப்பட வேண்டும். இவ்வாறு கழுவப்படுவதற்கு, திருத்தூதர் பவுல் விடுத்த 'கடவுளோடு ஒப்புரவாகுங்கள்' என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம். (2கொரி. 5:20) என்ற விண்ணப்பத்தை நினைவிற்கொள்வோம். நாமாகவே நம் தூசிகளிலிருந்து விடுபட இயலாது. இயேசுவால் மட்டுமே இது இயலும் என்பதால், அவரிடம் ஒப்புரவாகி, அவரின் உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற இந்த தவக்காலத்தில் முயல்வோம்.

## மறைமாவட்ட அறிவித்தல் பலகை

அருட்பணி. S. மதுராங்கன் குரூஸ் – பொறுப்பாளர் "Dio Constructions" மற்றும் மறைமாவட்ட காணிகள்

அருட்பணி. றொய்சன் ஸ்பாக்ஸ் – பொறுப்பாளர் மறைமாவட்ட பீடப் பணியாளர்கள்

அருட்பணி. S. சகாய ஜோன்பிள்ளை – பொறுப்பாளர் ஆயர் இல்ல பணிகள், வெல்வெரிப் பண்ணை

அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட் – மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர்

அருட்பணி. J. டன்ஸ்ரன் ப்ரட்றிக் – பங்குத்தந்தை, கந்தளாய்ப் பங்கு

அருட்பணி. சார்ளஸ் ஸ்டான்லி பிலிப் இ.ச – பங்குத்தந்தை, ஆண்டாங்குளம் பங்கு

அருட்பணி. S. A. செபஸ்டியான் ரெவெல் அ.ம.தி – உதவிப்பங்குத்தந்தை, இருதயபுரம் பங்கு – மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இம்மாத மேற்கோள்கள் அன்பின் மகிழ்ச்சி (திருத்தூது ஊக்கவுரையிலிருந்து......)**

# இலங்கைத் திருஅவையில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) ஆரம்பிக்கப்பட்டதன் 25வது யூபிலி ஆண்டுப் பூர்த்தியினை முன்னிட்டு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினால் வெளியிடப்படுகின்ற மேய்ப்புப்பணி மடல்

## "சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள் ) ஊடாக கிறிஸ்தவ வாழ்வின் புதுப்பித்தலை நோக்கி ..."

இயேசுக்கிறிஸ்துவில் பேரன்புமிக்க சகோதர சகோதரிகளே,

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினால் மிக நீண்ட தியானிப்பு மற்றும் கற்றல் போன்றவற்றினூடாக இலங்கைக்கான நற்செய்தி அறிவிப்புப்பணியின் மாதிரிகை சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் "அன்பியம்" (ஆசிபா) எனப்படும் ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறை **(ASIPA)** என அறிக்கையிட்டு இருபத்தைந்து (25) ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் (அன்பியங்களின்) 25 ஆண்டுகள் பூர்த்தியினையொட்டி எங்களது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். சிறிய கிறிஸ்தவக் குழுமங்களே (அன்பியமே) ஆசியாவில் "திருஅவையாக திகழ்வதற்கான வழியாகும்". "திருஅவை ஓர் உறவுக் குழுமம்" என்பதை திருஅவையின் போதனைகள் குறிப்பிடுகின்றன. இன்னும் சொல்லப்போனால், "உறவு" எனும் பார்வை திருஅவையினை தனித்த ஒருங்கிணைந்த குழுமமாக உருவாக்குகின்றது. ஒவ்வொரு தனித் திருஅவையும், சிறப்பாக, ஒவ்வொரு மறைமாவட்டத் திருஅவையும் தங்களது தலைமை மேய்ப்பராகிய ஆயரின்கீழ், தங்களது பங்குத் திருஅவைகளில் உறவினைக் கட்டியெழுப்பி, அவற்றினை நம்பிக்கை, அன்பு, பகிர்வு கொண்ட குழுமங்களாக மாற்றியமைக்க வேண்டும்.

இவ்வுறவின் அடிப்படை மூவொரு இறைவனாகும். "தாம் தந்தையுடனும் தூய ஆவியுடனும் இணைந்திருப்பதுபோல, தம்மிலே நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக" என்று இயேசுகிறிஸ்து தந்தையிடம் இறைவேண்டல் செய்தார் (காண்க. யோவா. 17:20-23).

திருஅவையின் இலக்கினைப் பின்பற்றியும். இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினால் இதுசார்ந்து மேற்கொள்ளப்பட்ட படிப்பினைகளின் ஒளியிலும், சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) 1995ம் ஆண்டில் அனைத்து மறைமாவட்டங்களினதும் மேய்ப்புப்பணி முன்னுரிமையாகக் கொண்டு அமல்படுத்திட அறிமுகம் செய்யப்பட்டது. இன்றைய சூழலில் நாம் எதிர்கொள்கின்ற பல்வேறுபட்ட சவால்களாகிய அடிப்படைவாதம், மதச்சார்பின்மை, தீவிரவாதம், பொருளாதார வறுமை போன்றவற்றின் மத்தியில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை (அன்பியங்களை) கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது. நாம் குழுமங்களாக ஒன்றாக இருப்பதன் வாயிலாக இந்தச் சவால்களை திறம்பட எதிர்கொள்ள முடியும். சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) இறைவார்த்தையில் அடித்தளமிடப்படுள்ள குழுமங்களின் குழுமங்களாகும். இன்றைய காலகட்டத்தில் நமது மக்கள் இறைவார்த்தையினை மிகவும் ஆழமாக அறிந்திட மனவிருப்பமும் தாகமும் கொண்டுள்ளார்கள். கிரமமாக ஒன்று கூடி இறைவார்த்தையினை வாசித்துத் தியானித்து அதன் வழியாக இறைமக்களின் நம்பிக்கை வாழ்வுப் பயணத்தை உறுதிப்படுத்துகின்ற சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை (அன்பியங்களை) மெச்சுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

குடும்பங்களை ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும், ஒருவர் ஒருவருக்கு உதவிகள் புரியவும், அன்பின் பாங்கினைக் கட்டியெழுப்பவும், அதன்வாயிலாக தொடக்கத் திருஅவையினை பிரதிபலிக்கவும் செய்கின்றது.

### குடும்பங்களின் பணியில் சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் (அன்பியங்கள்)

இன்றைய திருஅவையில், குடும்பங்கள் தங்களது பங்குத் திருஅவை என்கிற பெரிய (அகன்ற) குடும்பத்தினைச் சார்ந்தவர்கள் என்பதனையும் அதிலே அவர்களும் பங்களிப்புச் செய்ய வேண்டியவர்கள் என்பதனையும் புரிய வைக்கின்ற "இடைநிலைக் குழுவாக" சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) நோக்கப்படுகின்றன. சுயஉறுதியில் வளரவும், உளவியல் மற்றும் சமூகத் தேவைகளை வழங்கவுமே இக்குழுக்கள் உருவாக்குவதற்கான அடிப்படை மனிதத் தேவையும், மனித உரிமையுமாகும்.

எமது கிறிஸ்தவ மரபில், மனிதனை நன்கு அறிந்திருந்த இயேசு ஆண்டவர், தனது திருஅவையினை சிறிய குழுவுடன் ஆரம்பிக்க தீர்மானித்ததுடன், தொடர்ந்தும் சீடர்கள் மூலம் குழுக்களை உருவாக்கிடவும் அவர்களை உற்சாகப்படுத்தினார். அந்த வகையில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) அல்லது அயலவர்கள், குழுக்கள், குடும்பங்களுக்கும் பங்கின் பெரிய குழுமங்களுக்குமிடையிலான அத்தியாவசிய இடைநிலைக் குழுவாக (இணைப்புக்குழுவாக) செயற்படுகின்றன.

இக்குழுமங்களின் வெளிப்படையான செயற்பாடு யாதெனில் சமூக வலையமைப்பினை வழங்குவதாகும். சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை (அன்பியங்களைப்) பொறுத்தவரையில் இவ்வலையமைப்பானது இருவகையில் பொருள் பொதிந்ததாகும். அந்தவகையில், இக்குழுமங்கள் இயேசுவின் பெயரால் கூடுகின்ற நம்பிக்கையாளர்களின் குழுமங்களாகும். அவ்வாறே அவர்களது பிணைப்பானது அவர்கள் யாருக்குச் சொந்தமானவர்கள் என்கிற அடையாளத்தையும், பொருளினையும் அவர்களுக்கு வழங்குகிறது. மேலும் இவ் வலையமைப்பானது சமூக வாழ்விற்கான வாய்ப்பினை இழந்துள்ள தனிப்பெற்றோர் (தாய் அல்லது தந்தை மாத்திரம்), மற்றும் சிறிய குடும்பங்களுக்கும், மற்றும் கலப்புத் திருமண சூழ்நிலைகளால் இன்னல்களைச் சந்திக்கும் குடும்பங்களுக்கும் ஒரு பாதுகாப்பு வலையமைப்பாக செயற்படுகிறது. இவ்வலையமைப்பில் முதியோர்கள் தாங்கள் அன்பு செய்யப்படுகிறவர்களாகவும் வேண்டப்படுபவர்களாகவும் உணர்கின்றார்கள்.

### பங்குக் குழுமங்களின் பணியில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்)

சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை (அன்பியங்களை) கட்டியெழுப்புவதன் இன்னுமொரு மிகமுக்கிய தேவை யாதெனில் அருட்பணியாளர்கள் (பங்குத்தந்தையர்கள்) தங்களது மந்தைகளுடன் (பங்கு மக்கள்) நெருக்கமாவதற்கான களமாக அது அமைகின்றது. மக்களின் வாசனையினை அறிந்து செயலாற்றும் ஆயன்களாக மக்களுடன் நெருக்கமாக உடன் பயணிக்க திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு அடிக்கடி வலியுறுத்துவார். வாழ்வின் விளிம்பு நிலையிலுள்ள மாந்தரை நோக்கி நகர்ந்து செல்ல வேண்டியதன் தேவையினைக் குறித்து திருத்தந்தை அவர்கள் அடிக்கடி விருப்புடன் பேசுவார். "செல்லுங்கள்... மீண்டும்... மீண்டும்... சொல்கிறேன்... செல்லுங்கள்... சென்று மகிழ்வின் நற்செய்தியினை நாளாந்தம் பறைசாற்றுங்கள்." இன்று எமது பங்குத் திருஅவைகளில் அதிகளவிலான காணாமற்போன ஆடுகள் இருக்கின்றார்கள். சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் (அன்பியங்கள்) மக்களின் வாழ்வினைத் தொடுவதற்கான இயற்கையான வாய்ப்பினை அருட்பணியாளர்களுக்கு ஏற்படுத்தித் தருகின்றது.இதனால் அருட்பணியாளர்கள் தன்னந்தனியனாக இவற்றினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று பொருள் கிடையாது. மாறாக, பங்குத் திருஅவையில் அவர்களது சிறப்பு வழிகாட்டலின் ஊடாக, முன்மாதிரியாகவிருந்து சிறிய கிறிஸ்தவக் குழுமங்களை (அன்பியங்களை) வழிநடத்தக் கூடி ய பொதுநிலைத் தலைவர்களை உருவாக்க வேண்டியது அவர்களது பொறுப்பாகும்.

ஜனவரி 16, 2021 - புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் பெருவிழா, அன்றிலிருந்து இலங்கைத் திருஅவைக்கு சிறிய கிறிஸ்தவக் குழுமங்களின் (அன்பிங்களின்) யூபிலி ஆண்டு ஆரம்பிப்பதுடன், அதனை ஆதரித்து ஊக்குவித்து உறுதிப்படுத்த வேண்டுமென இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை இத்தால் பறைசாற்றுகின்றது. "கொவிட் 19" பெருந்தொற்று காரணமாக தேசிய மட்டத்திலான செயற்பாடுகள் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் மறைமாவட்டத் திருஅவைகளில் சிறிய கிறிஸ்தவக் குழுமங்களின் (அன்பியங்களின்) இயக்குனர்கள் தங்களது தலைமை ஆயரின் வழிகாட்டுதலுடனும், அருட்பணியாளர்கள், துறவிகள், சிறிய கிறிஸ்தவக் குழுமங்களின் (அன்பியங்களின்) தலைவர்களின் உதவியுடனும் தங்களது நிகழ்வுகளை ஒழுங்குசெய்து கொள்ளலாம்.

அனைவரையும் முடக்கச் செய்துள்ள உலகளாவிய பெருந்தொற்று நிலைமை விரைவாக நீங்கி மக்களுக்கு அமைதியும். சுகமும் கிடைத்திட வேண்டியும் அருள்நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

எமது பேரன்பிற்குரிய அனைத்து சகோதர சகோதரிகளையும், இலங்கையின் இராக்கினியும், பாதுகாவலியுமான எமது நாட்டின் ஒரே நியதியுமாகிய புனித கன்னி மரியாவின் பரிந்துரைக்கு ஒப்புக் கொடுக்கின்றோம்.

✠ மேதகு. ஜே.வின்ஸ்டன் எஸ்.பர்னாந்து, ந.நா.ச
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.
பதுளை மறைமாவட்ட ஆயர்

✠ மேதகு ஜே. டி. அந்தோனி
பொதுச்செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை.
கொழும்பு மறைமாவட்ட உதவி ஆயர்

+ Cu. Emmanuel
✠ மேதகு ஆண்டகை கி. நோயல் இம்மானுவேல்
தலைவர்
பொது நிலையினருக்கான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழு.
16 தை 2021

"திருமணம் புரிந்து, குடும்பம் அமைக்கும் ஆர்வம், இன்றும் இளையோரிடையே இருப்பது, திருஅவைக்கு உந்துசக்தியாக அமைந்துள்ளது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பேனா

# அன்பியங்களின் ஆண்டு 2021



சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் வழியாக நம் கிறிஸ்தவ வாழ்வினைப் புதுப்பிப்போம் என்ற அறைகூவலுடன் இவ்வாண்டினை இலங்கை ஆயர் பேரவை அன்பியவாழ்விற்காய் அர்ப்பணித்துள்ளது. கொரோனாவுடன் தோன்றியுள்ள கெடுபிடிகளால் காயப்பட்டுள்ள, பாதிக்கப்பட்டுள்ள, தொய்ந்துபோயுள்ள கிறிஸ்தவ நம்பிக்கையைக் கட்டியெழுப்பி நவீன சூழலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நம் கிறிஸ்தவ வாழ்வினைப் புதுப்பிக்க இவ்வாண்டு காலத்தின் தேவையாக எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த கொரோனா கட்டுப்பாடுகளின் மத்தியிலும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பங்குமக்களின் உடல் நலனிலும், ஆன்மீக நலனிலும் அக்கறைகொண்டு தம்மை முழுமையாக அர்ப்பணித்து, அனைத்துவித விமர்சனங்களையும் இயேசுவுக்கான தம் பணியின் அடையாளமாக ஏற்றுக்கொண்டு எளிமையோடும் தாழ்ச்சியோடும் களப்பணியாற்றிய எங்கள் மறைமாவட்டத்தின் அனைத்து பங்குத்தந்தையர்களின் தியாகப்பணியானது இவ்வாண்டில் இன்னும் அதிகரித்துள்ளது. அன்பியங்களைக் கட்டியெழுப்பவும், பேணி வளர்க்கவும், அவற்றின்வழி மேலும் நற்பணியாற்றவும் ஆயருடனான ஒன்றுகூடலில் உறுதிபூண்டுள்ள எம் பங்குத்தந்தையர்களை பாராட்டுவதோடு அவர்கள் பணிசிறக்க எம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். பெண்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைத்து நம்பிக்கையாளர்களையும் பங்குத்தந்தையர்களின் தியாகப் பணியில் உடன் பயணிக்க அழைத்துள்ளார்கள். நாமும் நம் மறைமாவட்டத்தில் குருக்களைப் பாதுகாத்து அவர்களின் பணியில் உடன் பயணிப்போம் என திருமலைத்தீபம் அழைத்து நிற்கிறது.

இலங்கைத் திருஅவை அன்பிய ஆண்டினை அனுசரிக்கும் அதேவேளை, உலகத்திருஅவையில் புனித யோசேப்பு மற்றும் குடும்பம் ஆகிய இரண்டு கருப்பொருள்களை மையப்படுத்தி இவ்வாண்டினை சிறப்பிக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள். கடுமையான கட்டுப்பாடுகள் இன்னும் தொடரும் இப்பெருந்தொற்றுக்காலத்தில் நாம் இக்கருப்பொருள்களை மையப்படுத்தி எமது நம்பிக்கைப் பயணத்தில் வளருவோம்.

இம்மாதத்தில் தவக்காலத்தினை ஆரம்பிக்கும் அனைத்து நம்பிக்கையாளர்களையும் வாழ்த்தும் திருமலைத்தீபம் அர்த்தமுள்ள அருளின் காலத்தினை வாழ செபித்து வாழ்த்துகிறது.

ஆசிரியர்

# அருமை





படித்ததில் பிடித்தது

அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட்

தாமரைக் குளம்.
அங்கேயே பிறந்து வளர்ந்தது தவளை.
குளமே வாழ்வு. குளத்து நீரே உயிர் மூச்சு.

தாமரை இலை மேல் அமரும்.
பூ மேல் படுத்து உறங்கும். பகல் கனவு காணும்.

ஆனால்... அப்பூவிலிருந்த தேனை மட்டும்
அத் தவளை கண்டுகொள்ளவே இல்லை.

எங்கிருந்தோ பறந்து வந்தது ஒரு வண்டு.
ஒரு விநாடியில் தேனைக் கண்டுகொண்டது.

நிதானமாய்க் குடித்தது.
ஒய்யாரமாகப் பாடியபடி பறந்து சென்றது.

பார்த்த பக்கத்து மரத்துக் குயில் பாடியது:
'அருகிலிருக்கும் தேனின் அருமை
எங்கிருப்பவருக்கோ தெரிந்தது.
அங்கிருப்பவருக்குத் தெரியவில்லை..'

*உயிர் நண்பனின் உன்னத திறமைகள்*
*உனக்கு மட்டும் தெரியாதது போவதேனோ...*

# அர்த்தமுள்ள தவக்காலம் - 01

**திருச்சடங்கில் விபூதி அல்லது சாம்பல்**

"நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்." (யோவேல் 2,12). தவக்காலம் திருநீற்றுப் புதனோடு ஆரம்பமாகின்றது. மிக ஆரம்ப காலங்களிலே இதை விபூதிப்புதன் அல்லது விபூதி விழா என்று அழைத்தனர். வேதாகமத்தில் "சாம்பல்" என்கின்ற வார்த்தை அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. (காண்க: விப 9:8, எண் 19:1-10, எபி 9:13, 2சாமு 13:19, யோபு 2:8 இந்த இடத்தில் எபிரேய விவிலியம் **אֵפֶר** 'எபெர் என்ற சொல்லை பயன்படுத்துகிறது, இதற்கு இணையாக கிரேக்க **σποδός** ஸ்பொதொஸ் என்ற சொல்லை பயன்படுத்துகிறது) இலத்தின் மொழியில் **'Cineres'** என்று அழைக்கப்படுகின்றது. **"Cineres"** என்றால் சாம்பல் என்று அர்த்தம் பெறுகின்றது. ஆங்கிலத்திலே **"Ash Wednesday"** என்றும் அழைக்கலாம். **Ash** என்றால் சாம்பல் என்று அர்த்தம் பெறுகின்றது. அனைத்துமே அதன் அர்த்தத்தையும் அந்நாளுக்குரிய மகத்துவத்தையும் குறித்துக்காட்டுகின்றது.

தொடக்கக் காலத்தில் கத்தோலிக்கர்களும் நெற்றியில் இவ்வாறே திருநீற்றை அணிந்து சென்றுள்ளனர், ஆனால், கலாபனைகளின் காலங்களிலே தங்களை கத்தோலிக்கர் என்று அடையாளம் காட்டக்கூடாது என்பதற்காக அதை அதிகம் தவிர்த்தனர். இந்த திருநீற்றை நெற்றியில் அணியும் போது அது இன்னுமொரு அர்த்தத்தையும் கொடுக்கின்றது. நாம் அனைவரும் "தூசு". சாம்பலைப்போல் காணாமல் போய்விடுவோம், மறைந்து போய்விடுவோம் என்கின்ற கருத்தும் தெளிவாகின்றது. அத்தோடு எமது வாழ்வும் மிக இலகுவாக உடையக்கூடியது என்பதையும் நினைவூட்டுகின்றது.

**'Dies Cinerum'** அதாவது "சாம்பலின் நாள்" என்கின்ற வார்த்தை தான் ஆரம்பத்தில் பாவிக்கப்பட்டு வந்துள்ளது. 8ம் நூற்றாண்டுக்கே உரித்தான கிறகோறியன் சக்ரமென்ரரி **(Gregorian Sacramentary)** அதாவது கிறகோரியன் திருப்பலி நூலிலே இதனது ஆரம்பம் காணப்படுகின்றது. திருப்பலி தொடங்கும் முன், அனைத்து இறை மக்களும் ஆலயத்திற்குள் காணப்படும் பீடத்தை நோக்கி செல்வர். அங்கே குருவானவர் ஏற்கனவே ஆசீர்வதிக்கப்பட்ட சாம்பலை ஒவ்வொருவர் நெற்றியிலே பூசுவார். குருக்களுக்கு அவர்களது உச்சந்தலையில் பூசுவர். இந்த சாம்பல் குருத்து ஞாயிறு தினத்தில் சேர்க்கப்பட்ட ஓலைகளை எரித்து பெறப்பட்டதாகும். இதன்போது செபங்கள் சொல்லப்படும், ஆசீர் நீர் தெளிக்கப்படும், தூபம் காட்டப்படும். எட்டாம் நூற்றாண்டிலே இவ்வகையான வழிபாடு ஆரம்பமானதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்ற போது நாம் கொண்டாடுகின்ற இந்த வழிபாடுகள் அனைத்தையும் சர்வசாதாரணமாக நிறைவேற்றவோ அல்லது அதில் பங்குபற்றவோ முடியாது.

**தவக்காலத்தில் நோன்பு**

ஆரம்ப கிறிஸ்தவ சந்நியாச வாழ்விலே நோன்பிருத்தல் என்பது சர்வ சாதாரண ஒரு நடைமுறையாகவே இருந்து வந்துள்ளது. இது ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து தான் தவக்காலத்திற்குரிய ஒரு தனி முயற்சியாக உருவாக்கப்பட்டது. ஆரம்பத்திலே புதன்கிழமைகளிலும், வெள்ளிகிழமைகளிலும் நோன்பிருந்து செபிப்பது வழக்கம். தற்போதும் கூட எமது கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வெள்ளிக்கிழமை உபவாசம் நோன்பிருந்து திருஅவையின்கட்டளைகளை அனுசரிப்பது பெருமை பாராட்டக்கூடியதே. இது திருத்தூதர்களுடைய காலத்தில் இருந்தே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அவர்களது காலத்திலே புதன்கிழமைகளிலும், மேலும் வெள்ளிக்கிழமைகளிலும் நோன்பிருந்தனர் என்பது டிடாக்கே நூலிலிருந்து தெளிவாகின்றது. நோன்பிருப்பது என்பது, உயிர்ப்பு ஞாயிருக்கு முன் வருகின்ற ஆறாவது ஞாயிறு தினத்தில் கொண்டாடப்பட்டது. இது இயேசுவின் நாற்பது நாள் நோன்பிருந்து சாத்தானால் சோதிக்கப்பட்ட நிகழ்வை தெளிவாக்குகின்றது. ஞாயிற்றுக்கிழமை ஆண்டவரின் நாள். அன்றைய தினத்தில் நோன்பிருக்க முடியாது. இதனால் அதை விடுத்து வருகின்ற 36 நாட்களும் நோன்பின் நாட்களாகும். இந்த நடைமுறை ஏழாம் நூற்றாண்டிலே அனுசரிக்கப்பட்டு, திரு நீற்று புதன், பாவமன்னிப்பு வழிபாட்டிற்கு முன் சேர்க்கப்பட்டது.



புனித தோமஸ் அக்குவினஸ் ஏன் உண்ணா நோன்பிருக்க வேண்டும் என்று முக்கியமான மூன்று விடையங்களைக் கூறுகின்றார். முதலாவதாக, எமது உடலின் காம உணர்வுகளை கட்டுப்படுத்துகின்றது. ஏனெனில் நோன்பைக் கடைப்பிடிப்பது என்பது கற்புக்கான பாதுகாவலாகும். மாமிச தவிர்ப்புக்கள், மதுபானங்களை தவிர்ப்பது கற்பு நெறிக்கான வழிகளாகும். இரண்டாவதாக, விண்ணக விடயங்களை பற்றி சிந்திக்க மனம் இன்னும் சுதந்திரமாக உயரக்கூடும் என்பதற்காக நோன்பு கடைப்பிடிக்க வேண்டும். தானியேல் இறைவாக்கினர் மூன்று கிழமைகள் நோன்பிருந்த பிறகு இறைவனின் வல்லமையுள்ள வெளிப்பாடு கிடைக்கப்பெற்றார். (தானி: 10). மூன்றாவதாக, யோவே: 2:12 கூறுவதைப்போல பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டி நாம் உண்ணா நோன்பிருக்க வேண்டும். அதாவது எமது பலவீனத்தினால் கட்டிக்கொண்ட பாவங்களுக்கு பரிகாரமாக நோன்பிருப்பது துணையாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குடும்பங்களில் உயிர்த்துணர்ப்படும் அன்பின் மகிழ்வே திருஅவையின் மகிழ்வாக உள்ளது'

# ஏதேன் தோட்ட மனிதர்கள்


4

அருட்பணி. கிறிஸ்டி போல்
கண்டி மறைமாவட்டம்



இவை யாவும் முதல் தனிமைக்கும் முதல் ஒன்றிப்புக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை உணர்த்துகின்றன. ஆதாம் தான் தனித்தன்மை வாய்ந்தவன் எனவும், படைப்புகளில் வித்தியாசமானவன் எனவும், இறைவனோடு நெருங்கிய தொடர்பு உடையவன் எனவும் உணரும் அதே வேளை, அவனுக்குள் இருக்கும் வெற்றிடத்தை அவன் அனுபவ ரீதியாக கண்டுகொள்கிறான். அவன் இறைவனோடு தனித்திருந்தான் ஆயினும் தனக்குள் ஒருவித வெறுமையை உணர்ந்தான். சக படைப்புகளிலே தனக்கு ஒரு துணையை தேடினான். ஆனால் அவ்வாறு அவனுக்கு ஏற்ற துணை ஒன்று தென்படவில்லை. விவிலிய ஏடுகளின் பார்வையில் நாம் நோக்கும்போது இறைவன் அவனுக்கென்று ஒரு துணையை ஏற்படுத்தி "இது எனது மகள் இவளை ஏற்று அன்பு செய்" என்று கூறுவதுபோல் சித்தரிக்கப்படுகிறது. ஆதாமும், ஏவாளை ஏற்றுக்கொள்கிறான். ஆதாம் அவளோடு இணைய இருவரும் ஒருடலாய் மாறுகின்றார்கள். முதல் ஒன்றிப்பு என்கிற அனுபவத்தில் இரண்டு முக்கியமான விடயங்களை திருத்தந்தை ஜோன் போல் அவர்கள் கோடிட்டு காட்டுகின்றார்.

1. ஏற்றுக்கொள்ளுதல்
2. தன்னைக் கொடுத்தல்



மனிதன் பெண்ணை அவளாகவே ஏற்றுக்கொள்கின்றான். அவளை ஏற்றுக்கொள்ளும் போது அவளை மாற்றவோ கட்டுப்படுத்தவோ அவன் முயலவில்லை. அந்த பெண் தன்னை பூரணப்படுத்துகின்றாள் என்பதை அவன் உணர்ந்து கொள்கின்றான். தங்கள் உறவில் ஆணும் பெண்ணும் சரிபாதி என்பதை அவர்கள் உணர்கின்றார்கள். தொடக்க நூலில் "மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல அவனுக்கென்று ஒரு துணையை உருவாக்குவோம்" என்கின்ற வார்த்தைகளில் "துணை" என்கிற வார்த்தை பழைய ஏற்பாட்டில் 21 தடவைகள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் 19 தடவைகள் இறைவன் தருகின்ற "உதவியோடு" இணைத்து பார்க்கப்படுகின்றது. பெண் ஒரு ஆணுக்கு தன்னுடைய முழுமையை அடைய உதவி செய்கின்றாள். அது போல ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தன் வாழ்வின் முழுமையை அடைய உதவி செய்கின்றான். ஆணும் பெண்ணும் சமமானவர்கள் எனினும் அவர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்பதனை திருத்தந்தை ஜோன் போல் அவர்கள் "ஆணும் பெண்ணும் மனித ஆளின் இரு வேறு அவதாரங்கள்" என குறிப்பிடுகின்றார். இது போலவே ஆணும் பெண்ணும் உண்மையாகவே மனிதர்கள் (**Human Beings**), அவர்கள் அன்பு செய்கின்றார்கள், சிந்திக்கின்றார்கள், நினைவாற்றலோடு செயலாற்றுகின்றார்கள், எல்லா காரியங்களையும் தங்கள் உடலால் செய்கின்றார்கள் எனவும் குறிப்பிடுகின்றார்.

மனிதன் என்பவன் மன உறுதி, அறிவு, விருப்புரிமை, நினைவாற்றல் ஆகிய ஆன்மீக யதார்த்தங்களை அல்லது உண்மைகளை கொண்டிருக்கின்றான். ஆண் பெண் இருபாலாரும் இவ் உண்மைகளை தனித்துவமான முறையிலேயே வெளிப்படுத்துகின்றார்கள். இந்த தனித்துவமான வித்தியசங்கள் ஆணும் பெண்ணும் சிந்தித்தல், செயல்படுதல், அன்பு செய்தல் ஆகியவற்றிலும் வேறுபடுவதோடு அவர்கள் தங்களுடைய உடல் ரீதியாகவும் தனித்துவமான முறையில் வெளிபடுத்துகின்றார்கள். உடல் ரீதியான வித்தியாசங்கள் எங்களுக்கு வெளிப்படையாக தெரிவதோடு ஆண் பெண் இருபாலாரிடையே உள்ள ஆத்மீக, மற்றும் மன ரீதியிலான வித்தியாசங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆண் பெண் இருபாலாரிடையே உள்ளார்ந்த ரீதியில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக ஒரு சித்திரத்தை உற்றுநோக்குகின்ற சிறுமி அச்சித்திரத்தில் உள்ள மனிதர்களையும், அவர்களது உறவுகளையும் பார்க்கின்றாள். ஆனால் ஒரு சிறுவன் அச்சித்திரத்தில் உள்ள பொருட்களை பார்க்கின்றான். மேலும் தங்களுடைய உரையாடலில் இளம் பெண்கள் 100% மான சொற்களை பயன்படுத்துகின்றார்கள் ஆனால் ஆண்கள் 70% மான சொற்களை பயன்படுத்துகின்றார்கள். அது போல பெண்கள் ஆண்களை விட உறவு முறைகளை மதிப்பவர்கள். ஆண்கள் வாழ்க்கையின் குறிக்கோள்கள், வேலைகள் ஆகியவற்றைப்பற்றி அதிகம் யோசிப்பவர்களாக இருக்கின்றனர். ஒரு ஆண் ஒரு நாளைக்கு 10000 வார்த்தைகளையும் ஒரு பெண் ஒரு நாளைக்கு 25000 வார்த்தைகளையும் பயன்படுத்துகின்றார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஒரு பெண்ணின் வலிமை அவளின் உறவு கொள்ளும் ஆற்றலில் தங்கியுள்ளது. உறவு முறைகளை அவளால் கட்டுப்படுத்தவும் முடியும், கட்டாயப்படுத்தவும் முடியும் என்கின்றனர். ஒரு ஆணின் வலிமை அவனுடைய தலைமைத்துவ பண்புகளில் தங்கியுள்ளது. அவன் நற்பெயர்களை பெறவும் மதிக்கப்படவும் விரும்புவான். ஆண் பொறுப்பற்றவனாகவும், பொறுப்புகளில் இருந்து இலகுவாக விலகக்கூடியவனாகவும் இருப்பான் எனவும் கூறுகின்றனர். அவர்கள் வாழ்வு நாளுக்கு நாள் முதிர்ச்சியடையும் போது இந்த ஆற்றல்களில் வளர முடியும். ஆண் பெண் இருபாலாரிடையே உள்ள இந்த வித்தியாசங்கள் மதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும். அவை கடவுள் மனித ஆளுக்கு தந்த வாழ்வின் யதார்த்தங்கள். ஆகவே அவை நல்லவையாக கருத வேண்டும்.

முதல் ஒன்றிப்பில் ஆதாம் இறைவன் தனக்கு தந்த ஏவாளிடம் விளங்குகின்ற உடலியல் ரீதியான வேறுபாடுகளை அவதானிப்பதோடு ஆத்மீக உளவியல் வேறுபாடுகளையும் அவதானிக்கின்றான். இதன் விளைவாகத்தான் அவன் அவள் மீது ஈர்க்கப்படுகின்றான். ஏனெனில் அப் பெண் அவனை பூர்த்தி செய்கின்றாள் என்பதை உணர்கின்றான். ஆதாம் ஏவாளோடு ஓர் உடலாகி அம் முழுமையை அடைகின்றான். அவன் ஏவாளை ஏற்றுக்கொள்கின்றான். அது போலவே அவள் அழகில் மகிழ்கின்றான். அதேவேளை ஆதாமும் தன்னையே ஏவாளுக்கு முழுமையாக கொடுக்க முன்வருகின்றான். அவர்கள் இருவரும் ஓர் உடலாய் மாறுகின்றனர். இதுவே முதல் ஒன்றிப்பின் இரண்டாம் அம்சமாகும்.

இவ்வாறு அவர்கள் ஒன்றிணைவதற்கு யாராலும் வற்புறுத்தப்படவில்லை. ஆதாமே ஏவாளோடு சுயமாகவும் சுதந்திரமாகவும் ஒன்றிக்க முன்வருகின்றான். ஆதாம் ஏவாளுக்கு தன்னை கொடுக்க தன் சுதந்திரத்தையும் விருப்புரிமையையும் பயன்படுத்தி அவளை தன் வாழ்க்கை துணைவியாக மாற்றிக்கொள்கின்றான். ஆதாம் தன் மனைவி உடன் ஒரு புதிய வாழ்க்கையை தொடங்க அவளுக்கு தன்னையே கொடுக்கின்றான். அவளை ஏற்றுக்கொள்கின்றான். அது போலவே ஏவாளும் ஒரு புதிய வாழ்வை தொடங்க ஆதாமுக்கு தன்னையே முழுமையாக கொடுத்து அவனை ஏற்றுக்கொள்கின்றாள். ஏற்றுக்கொள்ளலும் தன்னைக் கொடுத்தலும் உண்மையான நட்புறவுக்கு அடிப்படை காரணிகளாகும் என்பதை திருத்தந்தை ஜோன் போல் அவர்கள் கற்றுக்கொடுக்கிறார்கள்.

திருத்தந்தை ஜோன் போல் அவர்கள் இந்த ஒன்றிப்பின் அனுபவங்களூடாக ஆதாமும் ஏவாளும் தம்முடைய மனித வாழ்வில் ஒரு புதிய உணர்வை பெறுகின்றார்கள் எனவும், அவர்கள் இருவரும் தங்களையே புதுமையாக பார்க்கின்றார்கள் எனவும் கூறுகின்றார். மனிதர்கள் தம் சுயத்தை கொடுத்தல், பெற்றுக்கொள்ளல் என்பவற்றின் ஊடாக புதிய வாழ்வை நோக்கி அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். இந்த அனுபவத்தின் ஊடாக அவர்கள் ஒரு புதுமையை உணர்கின்றார்கள். திருமணம் முடிக்காத எம்மில் சிலர் இந்த அனுபவத்தை உணர்ந்திருக்கலாம். எம் நண்பரில் ஒருவருக்கு ஒரு பெண் தோழி கிடைத்தால் அவருடைய நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. அவர் ஒரு புதிய வாழ்வுக்கு தன்னை தயார்படுத்திக் கொள்கின்றார். என்பதை நாம் உணரலாம். திருத்தந்தை ஜோன் போல் அவர்களின் சிந்தனைகள் எமது வாழ்வின் அனுபவங்கள் முழுவதிலும் சிதறிக்கிடப்பதை அவதானிக்கின்றோம். ஒருவர் எம்மை மனம் நோகச் செய்யும் போது நாம் துன்பத்தை அனுபவிக்கின்றோம். அவ்வாறே ஒருவர் எம்மை ஏற்றுக்கொள்ளும் போது நாம் மகிழ்ச்சி அடைந்திருக்கின்றோம். அவ்வேளையில் நாம் எம்மை மற்றவரின் நலனுக்காக தியாகம் செய்கின்றோம். இவை அனைத்தும் முதல் ஒன்றிப்பு என்னும் அனுபவத்தின் முக்கிய பரிமாணங்கள் ஆகும்.

"திருமண ஆன்மீகத்தின் அடிப்படையானது கடவுள் குடிகொள்கின்ற ஆழ்ந்த திருமண உடன்படிக்கையில் தங்கியுள்ளது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் அன்னை
## எங்கள் லூர்த்து அன்னை



உன்னதரின் தாய் மரியே
உலகத்தின் தாய் ஆனவளே
லூர்த்து நகர் நாயகியே
உம்மையன்றி எம்மைக் காக்க
உலகில் அன்னை யாருமில்லை
உலகெல்லாம் பரவி விட்ட
கொரோனா என்னும் கொடிய வாதை
உலக மக்கள் யாவரையும்
உருக்குலைக்க வைக்குதம்மா
நோய்கள் என்றும் மரணங்கள் என்றும்
வாட்டி வதைக்குதம்மா
யாரிடம் தஞ்சம் புகுந்திடுவோம் - யாம்
யாவர்க்கும் அன்னை நீரல்லவா
பரமனின் தாயானவளே
பரிசுத்தரை பாதுகாத்த தாய் மரியே
பாரினிலே பதை பதைக்கும் மக்களுக்காய்
பரமனையே வேண்டுமம்மா
கொரோனா என்னும் கொடியவனை
கொன்றழிக்க அக்கினிப் பார்வைதனை
பார்க்க வேண்டி பரமனை வேண்டுமம்மா
கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை
என்று காட்ட வல்லமையை வெளிப்படுத்த
கானாவூர் திருமணத்தில் குறைதீர்க்க
பரிந்துரை பேசிய தாய் மரியே
கொடிய வாதை அழித்திடவும்
இழந்த மகிழ்ச்சி மீண்டும் மலர்ந்திடவும்
மண்ணில் வாழும் மக்களுக்காக
உம் மைந்தன் இயேசுவிடம்
பரிந்துரை பேசிடம்மா

க. கௌசல்யா
பாலையூற்று

**இந்த 40 நாட்களிலும் செய்ய கூடியவை**

1. உன்னுடைய நாளை இறை ஆசிர்வாதத்தோடு தொடங்கு.





2. ஒவ்வொரு நாளும் திருப்பலிக்கு செல்ல தவறாதே.

3. கிழமையில் ஒரு நாள் சிலுவை பாதை தியானிக்க தவறாதே.





4. பத்து நிமிடம் இறை வார்த்தையை சிந்திக்க மறவாதே
5. எளிமையாகவும் ஏழ்மையாகவும் வாழ பழகிக்கொள்.
6. கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பை பற்றி சிந்திக்க மறவாதே.



7. தவம் செய், பிறருக்கு கொடு



ச தவிர்ப்பு நாட்களை அனுசரி.





9. சினிமா மற்றும் திரைப்படங்கள் பார்ப்பதை முற்றும் குறைத்து விடு.



10. மது, புகைத்தல் போன்ற செயல்களிலிருந்து விலகி கொள்.

11. திரு யாத்திரை செய்துகொள்.

Fr. சுரேன். OMI

# அர்த்தமுள்ள தவக்காலம் - 02

## திருநீற்றுப்புதன் திருக்குழும மன்றாட்டு



தவக்காலத்தின் தொடக்க வழிபாடான திருநீற்றுப் புதன் திருப்பலியின் திருக்குழும மன்றாட்டு ஓர் அழகான அர்த்தத்தைக் காட்டுகின்றது. திருக்குழும மன்றாட்டு திருவழிபாட்டிலே மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இதுவே வழிபாட்டின் சாராம்சம் எனக் கூறலாம். இக்காலத்தின் உன்னத தேவையையும், ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தின் விளைவாக மனித குலத்திற்கு கிடைத்த பேரிழப்பை நிவர்த்திசெய்யவும், இறை-மனித உறவை மீண்டும் கட்டியெழுப்பவும் இதிலே பயன்படுத்தப்படும் சொற்கள் ஒரு வெளிச்சத்தை தருகின்றன. 1963ம் ஆண்டிற்கு பின்னரான, அதாவது இரண்டாம் வத்திகான் சங்கத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வெளிவந்த திருப்பலி நூல்களிலே இச்செபம் அதனது அளவிலும், பண்பிலும் மொழிபெயர்ப்பிலும் மாறுபட்டுள்ளது என்பது உண்மையே:

ஆண்டவரே, உம்முடைய விசுவாசிகள் இந்த புனித நோன்புக் காலத்தைத் தகுதியான பக்தியுடன் துவக்கி, அசையாத பற்றுறுதியுடன் அதில் முற்றும் நிலைத்திருக்க அருள்புரியும்.
(திருப்பலிப் புத்தகம்: பதிப்புரிமை: தமிழ் இலக்கிய கழகம், தூத்துக்குடி, 1967)

என்றென்றும் இரக்கமுள்ள இறைவா, கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தைப் புனித நோன்புகளுடன் தொடங்க எங்களுக்கு உதவி அளித்தருளும். தீய சக்திகளை எதிர்த்து நாங்கள் புரியும் போரில் எங்களையே ஒறுத்து உதவிபெறுவோமாக... (பூசைப் புத்தகம் 1979) என்றென்றும் இரக்கம் காட்டும் இறைவா! உம் திருமகனின் இறப்பையும் உயிர்ப்பையும் தகுதியுடன் கொண்டாட, எங்களை ஆயத்தம் செய்ய இந்த நாற்பது நாட்களை கொடுத்துள்ளீர். உமது இரக்கத்தில் நம்பிக்கை வைத்து நாங்கள் நோன்பிருந்து உண்மையான மனமாற்றம் அடையவும், எல்லாவித தீமைகளையும் எதிர்த்துப் போராடவும் துணைபுரிவீராக" (திருப்பலி நூல் 2016)

ஆண்டவரே, புனித நோன்புகளின் வழியாகக் கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தைத் தொடங்க எங்களுக்கு உதவியருளும் அதனால் ஆன்மீகத் தீமைகளுக்கு எதிராக நாங்கள் போரிட்டு, தன்னடக்கத்தின் உதவியால் காக்கப்படுவோமாக.
(திருப்பலி நூல் 2020)

1967, 1979, 2016 மற்றும் 2019ம் ஆண்டுகளில் வெளிவந்த திருப்பலிக்கான நூல்களில் பெறப்பட்ட செபங்களில் இருந்தே எனது ஆய்வை தொடருகின்றேன். கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தை, நோன்புகள் வழியாக தொடங்க முடியும் அல்லது தொடங்க வேண்டும் என்பதே இந்த செபத்தின் சாரம்சமாகும். இதுவே தவக்காலத்தினை சுருங்கக் கூறுவதாயின் வாழ்கை என்பது போராட்டம். ஆகவே, அதை நோன்பின் மூலமே வெல்ல முடியும். இந்த செபம் 1979ம் ஆண்டின் திருப்பலி நூலிலும், 2019ம் ஆண்டு வெளிவந்த திருப்பலி நூலிலுமே காணப்படுகின்றது. இது உரோமை திருப்பலியில் காணப்படுகின்ற இலத்தீன் செபத்தை அடியொட்டியதாகும். ஏனையவைகள் எங்கிருந்து உருவாகின அல்லது எப்படி தோற்றம் பெற்றன என்பது தெளிவற்றுக் காணப்படுகின்றது. 2019ம் ஆண்டு வெளிவந்த திருப்பலி நூலின் படி "ஆண்டவரே, புனித நோன்புகளின் வழியாகக் கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தைத் தொடங்க", என்று ஆரம்பிக்கின்ற இந்த செபத்தில் வருகின்ற போராட்டம் என்கின்ற சொல் **('Campaign' in English)** ஒரு யுத்த களத்தில் இருந்து போராடுகின்ற என்ற அர்த்தத்தை குறிக்கின்றது: **'presidia militiae christianae. Presidium'** என்கின்ற இலத்தின் சொல் பாதுகாக்கின்ற படை அல்லது யுத்த பாதுகாப்பு என்கின்ற அர்த்தத்தை குறிப்பிடுகின்றது. போர் முனையிலே எதிரியை சந்திக்க பெறப்படும் யுத்த பயிற்சிகள் அல்லது அதுசார்ந்த ஒழுக்கவியல் கடமைகள் என்றும் அர்த்தம் பெறலாம். ஆகவே, கிறிஸ்தவ வாழ்வின் போராட்டம் என்பது யுத்த களத்திலே போராடுவது போன்று, எதிரியான சாத்தானை வென்றொழிக்க போராடுவது போலாகும் என்கின்ற மிக ஆழமான கருத்துக்களை இந்த திருக்குழும மன்றாட்டு தருகின்றது. இந்த எண்ணங்களோடும் இறை வேண்டலோடும் தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம்.

Fr. சுரேன் . OMI

**தாராளமனம், அர்ப்பணிப்பு, பிரமாணிக்கம், பொறுமை என்ற புண்ணியங்களால், திருமண உறவும், குடும்பமும் அன்பில் நிலைத்திருப்பதற்கு இவ்வாண்டு அழைப்பு விடுக்கின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமா தயக்கம்! 15 புதிதாக மலர்ந்து மகிழ்வோம்!

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா க.ச

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! மீண்டும் திருமலை தீபம் இதழ் வாயிலாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். புதிய ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இந்த ஆண்டு முழுவதும் இறைவன் தன் அளப்பரிய அன்போடு உங்களை பராமரித்துப் பாதுகாப்பாராக. அவரது பாதுகாவலில், புதிதாக மலர்ந்து மகிழ்வோம்! என்று அன்போடு உங்களை வாழ்த்துகிறோம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு குறிப்பிட்ட நோக்கம், செயல்முறை, மனநிலை என்று அனைத்துமே புதுமையானதாக அமைந்துள்ளது. எனவே எந்த ஒரு மனிதனும், நான் இவரைப் போல வாழப் போகிறேன், இவர் வாழ்ந்து காட்டிய பாதையில் வாழப் போகிறேன், என்று நம் வாழ்வை பிறருடைய வாழ்வோடு ஒப்பிட்டு அதை பெரிதென்று நினைத்து அவ்வாறு வாழ முயற்சித்து தோற்றுவிடுகின்றார்கள். அத்தகைய மனிதர்களுள் நான் ஒருவனாக இருக்கக் கூடாது என முயற்சி செய்யுங்கள். காரணம், கடவுள் யாரையும் யாரைப் போன்றும் படைக்கவே இல்லை. ஒவ்வொருவரும் ஒரு சிறந்த தனித்துவத்தோடு பிறந்திருக்கிறார்கள். எனவே அவரவருக்கென்று ஒரு வாழ்க்கை முறை, அவரவருக்கென்று மனநிலைகள் மற்றும் சிறப்பியல்புகள் என்று ஒவ்வொரு மனிதனும் தனித்துவமிக்க சிறப்பு வாழ்வையே இறைவனிடமிருந்து பெற்றுள்ளனர்.



எனவே மனிதனின் அனைத்து அனுபவங்களும் ஒருவருக்கொருவர் புதிதாகவே இருக்கின்றன. ஒரு மனிதன் இன்னொருவன் வாழ்ந்த வாழ்க்கையை வாழ முடியாது, எனவே இன்னொருவரைப் போல வாழ விரும்புகிறேன் என்று சொல்லும் மனிதன் தன்னைத் தானே ஏமாற்றுகிறான் என்று பொருள். இந்த உலகத்திலுள்ள எந்த உயிருமே இன்னொரு உயிரைப் போல இல்லை. நம் தோட்டத்தில் பார்க்கும் ஒரு சிறு இலை கூட மற்றொரு இலையைப் போன்று நிச்சயமாக இருக்க முடியாது. ஏதாவது ஒரு விதத்தில் அது மாறுபட்டே இருக்கும். எனவே இந்த உலகில் உருவாகும் அனைத்துமே மிகவும் புதிதாகவே உருவாகின்றன.

இந்த விதத்தில் நம் அனுபவங்களையும் நாம் பார்க்கலாம். அனைத்துமே நமக்கு புதிதாகவே இருக்கின்றனவே தவிர எதுவுமே பழையதாக இருக்க முடியாது.

ஒரு மனிதன் முதன்முறை கடற்கரைக்குச் செல்கின்றான். கடல் அலைகளின் வருடல் அவனுக்கு ஒரு புதுவிதமான அனுபவத்தைக் கொடுக்கிறது. இதுவரை கடலையே பார்த்திராத அந்த மனிதனுக்கு கடல் அலைகளின் தொடுதல் கொடுத்த அனுபவத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அந்த மகிழ்வான தருணத்தை அனுபவித்துவிட்டு அதனை தன் குடும்பத்தாரோடு பகிர்ந்து கொள்கிறான். அவனது குடும்பத்தார் தாங்களும் கடலைப் பார்க்க விரும்புகிறார்கள், அவன் மீண்டும் அவர்களோடு கடற்கரைக்கு வருகின்றான். இப்போது, அவன் தான் முதலில் பெற்ற அதே அனுபவத்தை பெற விரும்புகிறான். அவனோடு வந்த அவன் குடும்பத்தினரும் அதே அனுபவத்தைப் பெற விரும்புகின்றனர்.

அவர்களுக்கு அந்த அனுபவம் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை. காரணம், அந்த நண்பருக்கு அந்த அனுபவம் பழையதாகிவிட்டது. எனவே பழைய அனுபவம் மீண்டும் ஒரு மனிதனுக்குக் கிடைப்பதில்லை. மற்றவர்களுக்கு அது அன்னிய அனுபவம். அவர்கள், தாங்கள் பெறவிருக்கும் அனுபவத்தை முன்கூட்டியே திட்டமிட்டார்களென்றால், அது அவர்களுக்கு சாத்தியமற்றதாகி விடுகின்றன. காரணம், அனுபவம் என்பது மிக மிக புதியதாகவும் புதுமையானதாகவும் தனித்துவம் மிக்கதாகவும் இருக்கின்றது. எனவே அனுபவம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தை உருவாக்கவே முடியாது.

வாழ்க்கை நமக்கு புதிதாக எப்போதுமே மலர்ந்துகொண்டிருக்கின்றது. "தேவர்கள் மனிதர்களைப் பார்த்து பொறாமைப்படுகிறார்களாம், மனிதர்கள் தேவர்களை விட மிக அழகாக இருக்கிறார்கள், என்று! தேவர்கள் எப்போதும் மாற்றமடையாமல் பழையதாகவே இருக்கிறார்கள். பழையதாகவே இருப்பதால் அவர்களில் அழகு இல்லை, மாறாக மனிதர்கள் ஒவ்வொரு நொடிப் பொழுதும் புதிதாக மலர்கிறார்கள். இந்தப் புதுமை அவர்களில் அதிக அழகை கொண்டுவருகின்றது' என்று ஒரு அறிஞர் கூறுவார். காலையில் மலர்ந்து மாலையில் உதிரும் மலர்களில் உள்ள அழகு வேறெதிலும் இல்லை. காரணம், அது ஒவ்வொரு நிமிடமும் புதிதாக இருக்கின்றது. விடியற்காலையில் அவிழாத மொட்டாகவும், புலர்ந்த காலையில் சிறிது அவிழ்ந்த மலராகவும், பகலில் முழுவதும் மலர்ந்த மலராகவும், பொழுது செல்லச் செல்ல வாடியும், அந்நாளின் இறுதியில் உதிரும் நிலையையும் கொள்வதால், ஒவ்வொரு நொடியும் அது புதிதாக இருக்கின்றது. ஒரே நிலையில் அது இருப்பதில்லை. அதுவே அதற்கு அழகு. மனித வாழ்க்கையும் அப்படித்தான். ஒவ்வொரு நிமிடமும் மனிதன் புதிதாகப் பிறக்கின்றான். அந்தப் புதுமையே அவனுக்கு அழகு.

இந்த அழகை நாம் அழகென்று பார்த்தால், அது நம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்பதாக அமைகின்றது. ஆனால், பல நேரங்களில் நாம் இந்த நிகழ்கால அழகை ரசிப்பதில்லை. மாறாக இறந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நான் இவ்வாறு வாழ்ந்தேன், அவ்வாறு வாழ்ந்தேன் என்று வாழ்ந்து முடித்த காலத்தை எண்ணி கற்பனையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த காலம் மீண்டும் வராதா என்று ஏங்குகின்றோம். அல்லது, என் வாழ்க்கையை அப்படி வாழ்வேன், இப்படி வாழ்வேன், என்று எதிர்காலத்தை கற்பனை செய்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உண்மையில் இந்த இறந்த காலமும் சரி, நாம் வாழப் போவதாக கற்பனை செய்யும் எதிர்காலமும் சரி, எதுவுமே உண்மையில்லை. காரணம், நாம் தொடர்ந்து வாழ விரும்பும் இறந்த காலம், உண்மையான இறந்த காலமா என்றால் நிச்சயமாக இல்லை, அதுவும், ஒரு அலங்கரிக்கப்பட்ட இறந்த காலம் தான். உண்மையான இறந்த காலத்தில் நாம் இந்த காலம் எப்போது மாறும் என்று தான் காத்திருந்தோம். இப்போது அந்த இறந்த காலம் மீண்டும் வராதா என ஏங்குகிறோம் என்றால், அதுவும் நம் மனதால் நம் கற்பனையால் அலங்கரிக்கப்பட்ட உண்மையற்ற இறந்த காலமே! சற்று ஆழமாக சிந்தித்தால் இந்த உண்மை நமக்குப் புரியும். அது போன்று, நாம் வாழ விரும்பும் எதிர்காலமும், நம் கற்பனையில் சாத்தியமாக இருக்குமே தவிர அதை எதார்த்தத்தில் கொண்டுவரமுடியுமா என்றால், அதுவும் சாத்தியமற்ற கற்பனையாகவே பல வேளைகளில் இருக்கின்றன. இவ்வாறு சாத்தியமற்ற ஒரு வாழ்க்கையை வாழ்வதிலே தான் மகிழ்ச்சி இருக்கின்றது என நாம் நம்புகிறோம். அவற்றை எதார்த்தத்திற்குக் கொண்டு வர இயலாமல், கற்பனையிலேயே நம் வாழ்வை முடித்துக் கொள்கிறோம். ஏனென்றால் கற்பனை மிக எளிதானது. எனவே தான் இத்தகைய கற்பனைகள் நம் மனதை நிரப்புவதை மகிழ்ச்சியோடு நாம் அனுமதிக்கிறோம். இறுதியாக நம் மனம் மாயைகளின் கோட்டையாகவே மாறிவிடுகின்றது.

இத்தகைய உண்மையற்ற நிலைகளை மட்டுமே நாம் விரும்புகிறோம் என்றால், நம் உண்மை நிலையோ, இன்றைய எதார்த்தமோ நமக்கு பிடிக்கவில்லை என்றால், அதற்கு என்ன காரணம்?

இன்றைய உலகம் விளம்பர உலகமாகவே மாறிவிட்டது. உண்மைக்கு புறம்பானதே விளம்பரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனாலும் இந்த விளம்பரங்கள் இல்லாமல் இந்த உலகமே இல்லை எனலாம். நான் தான் இந்த உலகில் மிக உயர்ந்தவன், நல்லவன், திறமை வாய்ந்தவன், எனவே நான் தான் சிறந்தவன், என்ற கருத்தை ஒவ்வொருவரும் தத்தமக்குரிய விதத்தில் ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டே தான் இருக்கின்றனர். அதாவது, இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவருமே தன்னைப் பற்றிய விளம்பரத்தை பிறருக்குக் காட்டிக் கொண்டே தான் இருக்கின்றனர். இவ்வாறு பிறரால் உருவாக்கப்பட்ட விளம்பரம், நம் மனதை அதிகம் கவர்வதே நம்மைப் பற்றிய எதார்த்தம் நமக்குப் பிடிக்காமற்போனதற்குக் காரணம். எந்த விளம்பரம் நம் மனதை அதிகம் கவர்ந்ததோ, அந்த விளம்பர கதாநாயகனை நாமும் நம் வாழ்வில் பின்பற்ற ஆசைப்படுகிறோம். நாம் பிறரைப் பற்றி காண்பதில் ஏறத்தாழ 80 விழுக்காடு விளம்பரம் தான் என்பதை பல நேரங்களில் ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுகிறோம்; மாறாக அதை உண்மையெனவே நம்புகிறோம்; அதுவாகவே மாற முயற்சிக்கிறோம். ஒவ்வொரு மனிதனும் தன் உண்மை நிலையை பிறருக்குக் காட்ட வேண்டுமென்று விரும்புவதே இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் ஆயிரம் பிரச்சனைகள் இருக்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் பிறருக்குக் காட்டி தன்னை தாழ்த்திக் கொள்ள யாருமே விரும்புவதில்லை. எனவே தன்னைப் பற்றிய ஒரு விளம்பரத்தை அவன் உருவாக்கி அதையே பிறர் பார்க்கும்படி செய்கிறான். அதாவது தன்னைப் பற்றி உண்மையில்லாத அதே நேரத்தில் பிறர் என்னை உயர்வாக எண்ணுமாறு உருவாக்கப்பட்ட ஒரு பிம்பத்தையே பிறருக்கு அவன் காட்டுகின்றான். இதையே நாம் உண்மை என்று நம்புகிறோம். எனவே தான் இறையியலாளர்கள், "இந்த உலகம் மாயைகளால் நிரப்பப்பட்டு, மாயைகளால் கட்டப்பட்டு கிடக்கின்றது' என்று கூறுவர்.

அன்பார்ந்தவர்களே, இந்தப் புத்தாண்டில், பிறரது விளம்பரங்களைப் பார்ப்பதை விட்டுவிட்டு, நம் வாழ்வைத் திரும்பிப் பார்ப்போம். நம் வாழ்வு ஒவ்வொரு நொடியும் புதிதாக மலர்கின்றது. இந்தப் புதுப்பிக்கப்படும் வாழ்வில், இறைவனின் பராமரிப்பு செயல்பாடுகளும் வினாடிக்கு வினாடி புதிது புதிதாக நம்மை வந்தடைந்து கொண்டே இருக்கின்றன. எனவே இறைவனின் செயல்பாடுகளையும், நாம் பழைய ஒரு கருத்தை நம் மனதில் பதித்துக் கொண்டு அதன் படியே இறைவன் நம் வாழ்வில் வரவேண்டுமென்று ஆசைப்பட்டால், அதுவும் நம் எதிர்பார்ப்பை ஏமாற்றமாகவே மாற்றித் தருகின்றது.

எனவே ஆசைப்படாத, அதிகம் எதிர்பார்ப்பில்லாத, கற்பனைகளற்ற, எதார்த்தத்தை ஏற்றுக் கொள்கின்ற நல்ல மனதை பெற்றுக் கொள்வோம். இந்தப் புதிய ஆண்டு தரும் புதிய உலகத்தை ரசித்து ஏற்றுக் கொண்டு மகிழ்ந்திருப்போம்!

மீண்டும் உங்களை திருமலை தீபம் இதழ் வாயிலாக சந்திக்கும் வரை அன்பு வணக்கம் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி.

எங்கெங்கு குடும்பவாழ்வு, சிறு குறைகளுடன், அமைதியையும், மகிழ்வையும் இழந்துள்ளதோ, அங்கு, ஒவ்வொருவரும் இரக்கத்தின் அடையாளமாக விளங்க, இவ்வாண்டு நம்மை ஊக்கப்படுத்துகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்தவ வாழ்வு சமூகம், திருகோணமலை மறைமாவட்டம் - ஒரு பார்வை



கிறீஸ்தவ வாழ்வு சமூகம் புனித இஞ்ஞாசியாரை ஆன்மீக ஊற்றாகவும் ஏற்று அவரது ஆன்மீகபயிற்சிகளை பெறுவததன் மூலம் பொதுநிலையினர் தமது அன்றாட வாழ்க்கையில் ஆன்மீகத்தை பின்பற்றி அதை நடைமுறை வாழ்வில் வாழ்ந்து காட்டவும் அழைக்கப்பட்ட ஒரு குழுவாகும். இது ஒரு "கிறீஸ்து மைய" வாழும் சமூகமாகும். கிறீஸ்து அனுபவம் இச்சமூகத்தில் காணப்படுவதோடு அவரின் இறைசெய்தியை மக்களுக்கு கொடுக்கும் சமூகமாகவும் திகழ்கிறது.

கிறீஸ்தவ வாழ்வு சமூகத்தின் விருது வாக்காக புனித இஞ்ஞாசியார் மொழிந்த "அனைத்தும் இறைவனின் அதிஉன்னத மகிமைக்காக" என்னும் வார்த்தையுடனும் பணிநோக்காக விழிம்பு நிலை சமூகத்தையும், ஏழைகளையும் ஒதுக்கப்பட்டவர்களையும் இலக்காக கொண்டு தமது பணிகளை முன்னெடுக்கும் ஒரு சமூகமாகவும் திகழ்கிறது. இது தற்போது உலகின் 62 இற்கும் அதிகமான நாடுகளில் இயங்குவதுடன் உரோமை நகரில் நிறைவேற்று செயலகத்தையும் கொண்டுள்ள ஓர் சர்வதேச பொதுக்கட்டமைப்பாகும்.

திருகோணமலை மறைமாவட்டத்தில் ஏழு பங்குத்தளங்களில் உள்ள குழுக்களில் சுமார் 60 உறுப்பினர்களைக் கொண்டதாக கிறீஸ்தவ வாழ்வு சமூகங்கள் இயங்கி வருகிறது. அதில் ஐந்து பங்குகளில் நிரந்தர குழுக்களும் ஏனைய இரு பங்குகளில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டும் சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி குழுக்களில் அங்கத்துவம் பெற்ற பிரநிதிகளின் பங்களிப்புடன் மறைமாவட்ட கிறீஸ்தவ வாழ்வு சமூக நிர்வாக கட்டமைப்பு ஒன்றும் இயங்கி வருகின்றது.

இதனடிப்படையில் பங்கு தளங்களில் கிறீஸ்தவ வாழ்வு சமூக குழுக்களை வழிநடாத்தி செல்லும் ஆன்மீக வழிகாட்டியாக பங்கு குருவானவரும் மறைமாவட்ட குழு ஆன்மீக வழிகாட்டியாக இயேசு சபை குருவானவர் ஒருவரும் நியமிக்கப்பட்டு குழுக்கள் வழிநடாத்தப்பட்டு வருகிறது.

மேலும் குழுக்களை வலுப்படுத்தும் நோக்கில் மறைவாவட்ட கிறீஸ்தவ வாழ்வு சமூக குழுவின் திட்டமிடலில் மாதாந்த நிர்வாக கூட்டங்களும் குழு வழிகாட்டல் மற்றும் உருவாக்கற் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளாகும்

மேற்படி செயற்பாடுகளின் அடிப்படையில் கடந்த 01.10.2020 அன்று மிக நீண்ட காலத்தின் பின் குழுக்களுக்கான கலந்துரையாடல் மற்றும் கடந்த கால இக்கட்டான சூழல்களுக்கு மத்தியில் எம்மை காத்து வழிநடத்திய இறைவனுக்கு நன்றி திருப்பலியும் ஆன்மீக வழிகாட்டி அருட்தந்தை றொபேட் **SJ** அடிகளாரின் நெறிப்படுத்தலுடனும் திருகோணமலை லொயோலா இல்லத்தில் ஒருங்கே நிகழ்ந்தேறியது. அன்றைய தினம் கருத்தமர்வாக குழுக்களுக்கிடையே உள்ள சவால்களும் குறைநிறைகளும் விரிவாக கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டது. அன்றைய தினம் விசேடமாக அருட்தந்தை றொபேட் **SJ** அடிகளாரின் குருத்துவ நினைவும் சிறப்பக்கப்பட்டது. சிறப்பு உரையாக அருட்தந்தை **X.I.** ரஜீவ அடிகளார் பங்குகளில் இயங்கும் கி.வா.ச குழுக்களில் முகங் கொடுக்கும் சவால்களுக்கு எப்படி இறை அனுபவத்தினூடாக தீர்வு காண முடியும் எனும் தொனிப்பொருளில் அன்றைய நாளில் வளவாளராக வருகை தந்து கருத்துரை ஒன்றையும் வழங்கி வைத்தார்.

அவரது கருத்துரையில் சிறப்பாக கி.வா.ச ஒரு பக்கிசபை என்பதற்கும் மேலாக ஆன்மீக சபை என்பதையும் ஆன்மீக காரியங்களில்தான் கூடுதலதன நேரத்தை செயல்படுத்தவேண்டும் எனவும் புனித இஞ்ஞாசியாரின் விருதுவாக்கினை குறிக்கோளாக எடுத்து ஆன்மீகப்பணியிலும் அப்போஸ்தலிக்கப்பணியிலும் அத்தோடு பங்கேற்கும் திருஅவையிலும் ஓர் அங்கமாக திகழ்ந்து முன்மாதிரியான வாழ்க்கை வாழவும் பங்குத்தளங்களிலே பங்குத்தந்தையுடன் இணைந்து பணி செய்வதும் சிறப்பானதாக அமையும் எனவும் குறிப்பிட்டிருந்தார். திரு விவிலியத்தில் கூறப்படுவதைப்போன்று இயேசு பன்னிரு சீடர்களைத் தேர்ந்தெடுத்து நற் செய்தியைப் பறைசாற்றுங்கள் என அனுப்புகிறார். அதே போன்றுதான் கி.வா.சமூகமாகிய எங்களையும் தேர்ந்தெடுத்து நற்செய்தியை அறிவிக்கவும் அதன்படி வாழ்ந்து பிறருக்கு முன்மாதிரிகையாக வாழ வேண்டும் என்னும் கருத்து ஆழமாக முன்வைக்கப்பட்டது.

திருகோணமலை மறைவ்ாவட்டத்தின் கிறீஸ்தவ வாழ்வு சமூகத்தில் இணைவதன் மூலம் ஆன்மீக வாழ்வில் வலுப்பெற இறைமக்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.



## உவர்மலை குழந்தை இயேசு ஆலய புனித வின்சன்ட் டீ பவுல் சபையினரால் புனிதரின் விழா சிறப்பித்தல்



உவர்மலை குழந்தை இயேசு ஆலய புனித வின்சன்ட் டீ பவுல் சபையின் புனிதரின் விழாவை சிறப்பிக்கும் முகமாக கடந்த 27.10.2020 அன்று பங்குத்தந்தையும் ஆன்மீக இயக்குனருமான அருட்பணி. **S.** சுகுனேந்திரன் குரூஸ் அடிகளாரின் தலைமையிலும் மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர் அருட்பணி. **S.** ஜோன்பிள்ளை அவர்களும் இணைந்து கொடியேற்ற வைபவத்தடன் திருப்பலி சிறப்பிக்கப்பட்டது.

திருப்பலி இறுதியில் இளைஞர்களுக்கான புதிய வின்சன்ஸ்சியன்ஸ்களை உருவாக்கும் நிகழ்வு பங்குத்தந்தையின் தலைமையிலும் தலைவர் அன்றூ கொல்சீன் அவர்களின் மேற்பார்வையிலும் நடைபெற்றது. இதில் 15 இளைஞர்கள் இணைந்து கொண்டனர். இந்நிகழ்வு குழந்தை இயேசு ஆலய வளர்ச்சிப்படியில் மேலும் ஒரு படி வளர்ச்சியாகக் கருதப்படுகின்றது. அன்றைய அங்கத்தவர்களின் காணிக்கைகள் யாவும் பங்குச் சமூகத்திலுள்ள வறிய ஆறு குடும்பங்களுக்கு பகிர்நதளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் சபையிலிருந்த 3 மூத்த உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்.

## அர்த்தமுள்ள தவக்காலம் - 03

### பாஸ்கா காலத்தில் திருமுழுக்கு

ஆறு வாரங்களை கொண்ட இந்த தவக்காலத்தில் இன்னும் ஒரு விசேட நிகழ்வு காணப்படுகின்றது. **Catechumens** எனப்படுவோர் அதாவது திருமுழுக்கு பெற இருப்போர் தங்களை இந்த ஆறு வாரங்களுக்கு ஆயத்தம் செய்வர். இந்த காலத்தின் தலையான நாளாகிய பாஸ்கா ஞாயிறு அல்லது உயிர்ப்பு ஞாயிறு அன்று திருமுழுக்கு பெறுவர். முதல் நான்கு நூற்றாண்டுகளில் இந்த திருமுழுக்கு கொண்டாட்டம் பெந்தகொஸ்தே நாளன்று கொடுக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இதை பற்றிய ஆழமான விளக்கங்கள் அப்போஸ்தலிக்க பாரம்பரியம் **Apostolic Tradition 215 C.E.** என்கின்ற நூலிலே தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது **(The Apostolic Tradition, Paul F. Bradshaw Maxwell E. Johnson, L. Edward Phillips, Fortress Press)**. இந்த நாளிலே இத்திருமுழுக்கின் ஊடாக கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கிறிஸ்தவ குழுமத்தோடு ஒன்றிணைகின்றமை திருச்சபையின் வழிபாட்டிற்கும் பரம்பரியத்திற்கும் பெருமை சேர்கின்றதாக அமைகின்றது. இன்று கத்தோலிக்க திருஅவையும் கீழைத்தேய திருஅவையும் இந்த திருஅவையின் ஆரம்ப கால பாரம்பரியத்தினை கடைபிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் தான் உயிர்ப்பு ஞாயிறு வழிபாட்டிலே திருமுழுக்கு கொடுக்கின்ற சடங்கும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தவக்காலம் இறைமக்களின் தூய வாழ்வுக்கான அழைப்பினூடாக திருஅவை தனது தூய்மையை புதுப்பித்து கொள்கிறது. ஆகவே எமது தூய்மை தான் திருஅவையின் தூய்மையாகும். நாம் பாவம் செய்யும் போது எமக்கு எதிராக மட்டும் பாவம் செய்வதில்லை, மாறாக எம்மில் உறவாடும் கிறிஸ்துவுக்கு எதிராகவும், திருஅவைக்கு எதிராகவுமே பாவம் செய்கிறோம். தவக்காலம் எமக்கு 40 நாற்பது நாட்களை கொடுத்து, கிறிஸ்துவின் பாஸ்கா மறை பொருளாகிய பாடுகள் மரணம் உயிர்ப்பை தியானித்து மனம் திருந்தி வாழ எம்மை ஆயத்தம் செய்கிறது. இந்நாட்களில் நாம் முழுமையான பாவ சங்கித்தனம் செய்து எம்மை முழுமையாக இறைவனோடு இணைத்துக் கொள்ளவும் அவரது பாடுகள் நிறைந்த புனித வாரத்தில் பங்கு கொள்ள அழைப்பு விடுக்கின்றது.

இந்த சிந்தனைகளோடு எமது தவக்காலத்தை ஆரம்பிப்போம். அர்த்தமுள்ள ஆழமான ஒரு பயணத்தை ஆரம்பிப்போம்.

**Fr.** சுரேன். **OMI**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு சார்ந்த வழிபாடு

அருட்பணி. அலெக்ஸாண்டர் மரியதாஸ்

## திருவழிபாட்டின் சமூகப்பண்பு

திருவழிபாடு இறை நம்பிக்கையின் அடித்தளத்தில் அமைந்திருக்கிறது. அதே வேளையில், இது திருஅவை முழுவதற்குமான அதிகாரப்பூர்வமான வழிபாடாகும். கிறிஸ்துவின் மறையுடலான திருஅவை, தன் தலையாகிய கிறிஸ்துவோடு இணைந்து. முழுமையான வழிபாடு நடத்துகின்றது. இதனால்தான் "திருவழிபாட்டுக் கொண்டாட்டம் ஒவ்வொன்றும், திருப்பணியாளராகிய கிறிஸ்துவினுடையவும், திருஅவை என்னும் அவரது உடலினுடையவும் பணி என்னும் முறையில், அனைத்திலும் உயர்ந்த திருச்செயல் ஆகின்றது. தகுதியிலும், நிலையிலும் இச்செயலின் ஆற்றலுக்குத் திருஅவையின் வேறு எந்த செயலும் இணையாகாது".

(திருவழிபாடு எண் 7, இரண்டாம் வத்திக்கான் சங்கஏடு)

கத்தோலிக்க வாழ்வின் மையம் திருவழிபாடு, ஏனெனில் இதன் வழியாகவே, முழுமையான வழிபாட்டில் பங்கேற்க முடியும். **LITURGY** என்கிற வார்த்தை கிரேக்க வார்த்தையான **LEITOURGIA** விலிருந்து வருகிறது. இதற்கு "மக்களுக்கான சேவை" என்று பொருள். தொடக்க முதலிலே, நம் கத்தோலிக்க வழிபாடுகள், குழுக்களாகவோ, பெரிய கூட்டமாகவோ நடந்து வந்தன. நம்பிக்கை கொண்டோர் கூடி வந்து இறை சமூகமாய் வழிபாடுகளை நடத்தினர். கூடிவருகிறபோது தனித்தனி உறுப்புக்களான கத்தோலிக்க நம்பிக்கையாளர்கள், கிறிஸ்துவின் மறையுடலாய் இணைந்து, தன் தலையாகிய கிறிஸ்துவோடு, ஒரே குரலாய், ஒரே மனதாய், முழுமைபெற்று வழிபாடு நடத்துகின்றனர்.

"திருவழிபாட்டுச் செயல்கள், தனிநபரின் செயல்களன்று, மாறாக அவை "ஒன்றிப்பின் அருளடையாளம்" **(Sacrament of Unity)** (திருவழிபாடு எண் 26, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு). அருளடையாளம் என்று புலன்களுக்கு அப்பாற்பட்ட இறைவனின் அருளை புலப்படும் வகையில் வெளிப்படுத்துவதேயாகும். வரைவிலக்கணமாகச் சொன்னால், "உன் அருளின் வெளி அடையாளம்" **(outward sign of inward grace)**. "ஒன்றிப்பின் அடையாளம்" என்றால் ஒன்றிப்பை அதாவது கூடிவருவதை, வெளிஅடையாளமாகக் காட்டுவதோடு நில்லாமல், ஒன்றித்திருத்தலின் அருளாகவும் இருக்கிறது. திருவழிபாட்டுச் செயல்கள் ஒன்றிப்பின் அடையாளமாக சமூகப் பண்பை வெளிப்படுத்துகின்றன.

திருமுழுக்கினால் கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுள்ள ஒவ்வொருவரும், அவரது உடலோடு இணைக்கப்பட்டு, அவரது உடலின் உறுப்பாக மாறுகின்றனர். இதனால் இவர்கள் உலகில் ஒரு தனிச் சமூகமாக உருவாகின்றனர். திருத்தூதர் பேதுரு சொல்வது போல, "தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரசகுருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தார், அவரது உரிமைச் சொத்தான மக்கள்" (1பேதுரு 2:9). இப்படி கிறிஸ்துவின் உடல் உறுப்புக்களான, நம்பிக்கையாளர்கள் கூடிவந்து, இறைவேண்டல் செய்யவே திருஅவை விரும்புகிறது. "திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் சமூக வழிபாட்டுக் கொண்டாட்டங்களாய் அமைய வேண்டும். அவற்றைத் தனிமையிலும், தனியார் காரியம் போலும் கொண்டாடுவதை விட கூடியவரையில் (மக்கள் கூடி வந்து) கொண்டாடுவது சிறந்தது என்பதை உணர வேண்டும். இவ்வாறு சொல்வது சிறப்பாகத் திருப்பலி அருளடையாளங்களின் கொண்டாட்டங்களுக்குப் பொருந்தும். எனினும் எந்த ஒரு திருப்பலியும், எப்பொழுதும் பொதுத்தன்மையும், சமூகப் பண்பும் வாய்ந்தது என்பது தெளிவு" (தி.வ.எண்27). நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்பு. தனித்தனி உறுப்பாய் இல்லாமல், கூடி வந்து, மறையுடலாகி கூடி வருகிறபோதே நம்மிடையே பிரசன்னமாகிற (மத் 18:19-20) கிறிஸ்துவோடு இணைந்து செலுத்தும் முழுமையான வழிபாடே திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள். இவற்றில் இறைசமூகமாய் பங்கேற்பதால் கிறிஸ்துவின் உடல் முழுமையடைந்து (இறைசமூகம் - மறையுடல் கிறிஸ்து - தலை (1கொரி 12:27 கொலோ 1:18) முழுமையான கிறிஸ்துவின் **(Christus Totus)** செயலாகிறது திருவழிபாடு. (கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி எண் 1136). இதனடிப்படையில் திருவழிபாட்டின் சமூகப்பண்பு இன்றியமையாததாக மாறுகிறது.

இன்றைய நோய்த்தொற்றுக் காலத்தில் கூடிவருவது கிருமிகள் பரவலை அதிகரிக்குமாதலால் சமூக விலகல் என்னும் கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தொலைக்காட்சிப் பெட்டியும், **You Tube**ம் **Facebook**ம் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களை ஒளிபரப்பும் வழிகளாக மாறியுள்ளன. ஊரடங்கு தளர்ந்தாலும், சமூக விலகல் தொடர்கிறது. குறிப்பிட்ட எண்ணிக்கையில், சரியான நோய்த்தடுப்பு, தூய்மை முறைகள், மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளோடு கூடிவர, தளர்வுகள் தரப்பட்டு, வழிபாடுகள் நடக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களின் சமூகப்பண்பை எப்படி செயலாக்குவது? முழுமையான கிறிஸ்துவின் உடலாய் **(christus Totus)** இணைந்து வழிபடுவது எப்படி?

தவிர்க்க முடியாத காரணங்களால் தொலைத் தொடர்பு ஊடகங்களை பயன்படுத்தி திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள அனுமதியளித்திருந்தாலும், திருவழிபாடு அடிப்படையில் சமூகப்பண்பு கொண்டது என்பது நிலையான உண்மை. இதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஏனெனில் "திருவழிபாடு" என்றாலே திருஅவையின் பொது வழிபாடு, என்று பொருள் கொள்ளப்படுகின்றது. எந்தவிதமான சூழ்நிலை ஏற்பட்டாலும் திருவழிபாட்டின் சமூகப்பண்பை மாற்ற முடியாது,

சமூகப்பண்பை எப்படி புரிந்து கொள்வது? ஒரு தனிமனிதர் தான், தனது என்கிற வட்டம் விட்டு அதாவது எனது, எனக்கான நேரம், என்னுடைய இடம், என்னுடைய விருப்பம், என் சிந்தனை... என்கிற வட்டம் கடந்து, இன்னொரு தனிமனிதரோடு இணைந்து இருவரின் பொதுநலன் கருதி வாழ்கிறபோதே சமூகம் பிறக்கிறது. ஒரு மனிதரின் வாழ்வில் இன்னொரு தனிமனிதரோடு இணைந்து இருவரின் பொதுநலன் கருதி வாழ்கிறபோதே சமூகம் பிறக்கிறது. ஒரு மனிதரின் வாழ்வில் இன்னொரு மனிதர் ஏதாவதொரு வகையில் வருகிறபோது அது சமூகமாகிறது. "மனிதன் ஒரு சமூக விலங்கு" என்கிறார் கிரேக்க தத்துவ ஞானி அரிஸ்டாட்டில். சமூகமின்றி எவரும் வாழ முடியாது. சமூகத்தை மதிக்காதவரைக்கூட சமூகம் நெறிப்படுத்துகின்றது என்பதைக் குறிக்க அவர் இப்படி சொன்னார்.

திருஅவை குறிப்பிடும் சமூகப்பண்பு என்பது பொது நன்மைக்காக சுயநலம் களைதல், இயேசு சொல்வது போல "...மனமொத்திருத்தல்....." (மத் 18:19-20). கூடி வருவது அதன் வெளியடையாளம். "ஒன்றிப்பின் அருளடையாளம்" என நாம் முன்பே குறிப்பிட்டபடி கூடிவரும் இறைசமூகம் புலன்களால் நாம் உணரும்படி ஒன்றிப்பை, கிறிஸ்துவின் மறை உடலை வெளிப்படுத்துகின்றது. என்னதான் சமூக விலகல்கள் இருந்தாலும், இந்த ஒன்றிப்பை, மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

திருவழிபாடு ஒரு தனிப்பட்ட செயல் அல்ல. அது சமூகத்தின் செயல், மனித குலம் முழுமைக்குமாக, கிறிஸ்து கொண்டு வந்த மீட்பை, மனித குலத்தின் பிரதிநிதிகளாக, சமூகங்களாக இணைந்து கொண்டாடும் மனித குலத்தின் செயல். கிறிஸ்துவாகிய தலையோடு மறையுடலின் உறுப்புக்களாகிய நம்பிக்கை கொண்டோர் இணைந்து செய்வதால் இது முழுமையான கிறிஸ்துவின் செயல். இங்கு திருஅவை வலியுறுத்தும் செய்தி ஒன்றிப்பு. உடல்களால், அருகாமையில் இருப்பதை விட, உள்ளத்தால் இணைந்திருப்பது. மனதளவில் நெருக்கமாய் இருப்பது. விலகல்களைத் தாண்டி, மனதால் ஒன்றித்திருப்பது. இடத்தால் இடைவெளி, உள்ளத்தால் ஒன்றிப்பு என கூடிவருவதன் உண்மைப்பொருளை உணர்வது. உண்மையில் கூடிவருவது "வாடிக்கையாய்" இருந்த காலங்களில் ஒன்றாய்ச் சேர்ந்து கட்டி அடுக்கப்பட்ட மரக்கட்டைகள் போல நெருக்கமாய் இருந்தும் விலகி இருந்திருக்கிறோம் மனதால்.

கூடி வருவது முடியாத சூழலில் தான் ஒன்றிப்பின் உண்மைப் பொருள் புலப்படுகிறது. விலகியிருந்தும் நெருக்கமாய் இருக்கிறோம். மனதளவில் இதனைக் கற்றுக் கொடுக்கத்தான் **COVID** 19 வந்ததோ என்னவோ!. ஒன்றிப்பு என்பது பொதுநலன் கருதி சுயநலம் களைவது என்றறிந்தபடி, உடலால் விலகியிருப்பது - பொதுநலனுக்காக, பிறரன்புக்காக, அடுத்தவர் மீதுள்ள அக்கறைக்காக... அதே வேளையில் உள்ளத்தால் இணைந்திருப்பதே சமூகப்பண்பு. இதுவே திருவழிபாட்டின் அடித்தளம். ஒன்றிப்பின் அருளடையாளமாய் நாமும் மாறுவோம். வழிபாட்டை வாழ்வாக்குவோம்.

# அர்த்தமுள்ள தவக்காலம் - 04

## தவக்காலத்தில் சிலுவைப்பாதை

சிலுவைப்பாதைகள் என்பது இயேசுவின் பாடுகள், மரணம், மற்றும் உயிர்ப்பை தியானித்து அவரோடு பயணிக்கும் அன்பின் பாதை. இதை **'Via Crucis'** என்று இலத்தின் மொழியிலே அழைக்கின்றோம். பதினாங்கு தலங்களை கொண்டு அவற்றை ஒழுங்கமைய இயேசுவின் பாடுகளின் பாதையாக சிந்திக்கசிலுவைப்பாதை அழைக்கின்றது. இது கத்தோலிக்க பாரம்பரிய முறைப்படி பின்பற்றப்பட்டு வருகின்ற ஓர் அழகான பொது வழிபாடாகும் **(Paraliturgy)**. எருசலேமில் தான் இந்த பக்திமுயற்சி ஆரம்பமாகியிருக்கலாம். ஆனால் அது பதின்னான்கு தலங்களை கொண்டதாக அமையவில்லை. காலப்போக்கில், பிரான்சிஸ்கன் மறைபரப்பு துறவிகளால் இதை உலகறியச் செய்திருக்கலாம் என்றும், 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இது அழகான தோற்றம் பெற்று 14 தலங்களாக உருப்பெற்றது என்றும் நம்பப்படுகின்றது.

இந்த 14 நிலையங்களும் இயேசுவின் துக்கமான அல்லது வியாகுலம் நிறைந்த வாழ்வின் கடைசி பகுதியை படம்பிடித்துக் காட்டுகின்றது. சிலுவையின் வழிதான் மீட்பு என்கின்ற உண்மையை காட்டவும் இயேசுவின் காயங்களோடு, அவரது துன்ப துயரங்களோடு பயணிக்கவும் இந்த சிலுவைப்பாதைகள் அழைக்கின்றன. இது ஓர் ஆன்மீக யாத்திரை. இயேசு, தனது அளவிட முடியாத அன்பை சிலுவைச் சாவின் மூலமே வெளிப்படுத்தினார் என்பதை சிந்திக்க தூண்டுவது இந்த சிலுவைப்பாதை. இயேசுவை சிலுவையில் அறைந்தது யார் என்பது எமது கேள்வியாக மாறக்கூடாது மாறாக இயேசுவை சிலுவையில் அறைந்தது என்ன? என்பதே எமது சிந்தனையாக இருக்க வேண்டும்.

சிலுவைப்பாதையை ஒவ்வொரு வருடமும் வருகின்ற தவக்காலத்தில் மாத்திரம் சிந்தித்து தியானிக்கவேண்டும் என்றல்ல, மாறாக, அது வாழ்வின் பயணம். எமக்கு தேவையான நேரங்களில் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை பற்றி சிந்திக்க தியானிக்க கடமையும், உரிமையும் உண்டு. ஆனால், தவக்காலங்களிலே இவற்றை கடைப் பிடிப்பது இன்னும் அதிக அர்த்தத்தை தருகின்றது.

**Fr.** சுரேன். **OMI**

"குடும்பத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இரக்கச்செயல்கள் குடும்ப ஆன்மீகத்தின் திறவுகோலாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபத்தின் ஒளியில்

பதில்கள்: அருட்பணி. இ. யூட் சர்வானந்தன் அடிகளார்
இயக்குனர், திருவழிபாட்டு ஆணையம்

சென்ற இதழ் தொடர்ச்சி .....

**06. பன்றி இறைச்சியை உண்ணுவது சரியா? திருஅவைக்கு அசுத்தமானதா?**
இறைவன் படைத்தவை அனைத்தும் நன்மையானவையே இறைவன் எல்லாவற்றையும் படைத்ததன் பின்பு நல்லது எனக் கண்டார். ( தொநூ 1: 24 - 25) எனவே, எதுவும் இறைவனின் பார்வையில் தீட்டானது அல்ல. பேதுரு யோப்பாவில் கண்ட கனவும் இதற்கு உறுதுணையாக இருக்கிறது. இறைவன் எதையும் தீட்டாகக் கருதவில்லை (தி.பணி 10: 10 - 16) இதிலே நடப்பன, தரையில் ஊர்வன, வானில் பறப்பன அனைத்தும் உணவாகக் கொடுக்கப்பட்டன. மேலும் இயேசு எவ்வித உணவுப்பொருளும் அசுத்தமானது அல்ல அனைத்தும் தூய்மையானதே என கூறுகின்றார். ( மாற்கு 7:18 -19) எனவே பன்றி இறைச்சியை உண்ணுவது அசுத்தமானது அல்ல. அது தனிப்பட்ட விருப்பு வெறுப்பே அன்றி கத்தோலிக்க திருமறையுடன் எவ்வித தொடர்பும் இல்லை. சிலர், இயேசு பன்றிகள் மேல் பேய்களை விரட்டியதால் அவை அசுத்தமானது என கூறுகின்றனர். (லூக்கா 8:32) ஆனால் அவ்விடம் புறவினத்தவர் வாழும் இடம் என்பதை காட்டவே பன்றிகள் மேய்ந்து கொண்டிருந்தன என காட்டப்பட்டிருக்கின்றது. ஏனெனில் யூதர்கள் பன்றிகளை தீட்டு என கருதினர். எனவே பன்றியை தீட்டு எனக்கருத நாம் யூதர்களும் அல்ல, முஸ்லிம்களும் அல்ல, கிறிஸ்துவை விசுவசித்து பின்பற்றும் உரோமை கத்தோலிக்கர்கள்.

**07. திருஅவைக்கு கத்தோலிக்கம் என பெயர் வரக்காரணம் என்ன? கத்தோலிக்கம் என்று திருவிவிலியத்தில் குறிப்பிடப்படவில்லையே?**
கத்தோலிக்கம் என்றால் உலகளாவியது. எல்லாக் காலத்திற்கும் உரியது, எல்லாவற்றையும் உள்ளடக்கியது என்று பொருள்படும். கத்தோலிக்கம் என விவிலியத்தில் வெளிப்படையான சொற்பிரயோகம் இல்லை, எனினும் இறையரசை எல்லா மக்களிடையேயும் கட்டியெழுப்புவது இறைவனின் குறிக்கோள் என திருவிவிலியத்தில் உள்ளார்ந்த பொருளை உணர்த்துகின்றது. எனவே கத்தோலிக்கம் எனும் இறையியல் விவிலிய இறையியலை சார்ந்தது.

**08. திருப்பலியின் செயற்பாடுகள் ஒரு வெளிஅடையாளமா அல்லது உள்ளத்தால் செயற்படுவதா?**
திருப்பலியின் செயற்பாடுகள் அனைத்தும் உயரிய இறையியலையும் உள்ளார்ந்த நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றது. எனவே தான், திருப்பலியை பார்ப்பதற்காக செல்லக்கூடாது திருப்பலியில் பங்குகொள்ளச் செல்ல வேண்டும் என கூறுவர். திருப்பலியை பார்க்கச் செல்பவர்கள் திருப்பலியின் உன்னதத்தை உணர முடியாது.

**09. ஏன் கத்தோலிக்கத் திருஅவையில் 7 கிறிஸ்தவ சபைகள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டது?**
இவ் கிறிஸ்தவ சபைகளின் நம்பிக்கையும் திருமுழுக்கும் கத்தோலிக்க திருஅவையுடன் இணைந்து செல்வதனால் இச்சபைகள் எற்றுக்கொள்ளப்படுகின்றது.

**10. இயேசு ஏறக்குறைய 30 வயதில் திருமுழுக்குப் பெற்று தம் பணியை ஆரம்பித்தார் என திருவிவிலியம் கூறுகிறது. ஏன் நாம் குழந்தைகளுக்கு திருமுழுக்கு கொடுக்கின்றோம்.**
இயேசுவினுடைய திருமுழுக்கு தமக்கு நேரம் வந்த போது தம்மை உலகிற்கு வெளிப்படுத்துவதற்காகவே இருந்தது. தம்மை வெளிப்படுத்த வேண்டிய நேரம் 30 வயதாக இருந்தது. ஆனால் பிறப்பிலிருந்தே பாவ நிலையிலிருக்கும் நமது நிலை இயேசுவின் நிலையிலிருந்து மாறுபட்டது.

கத்தோலிக்கத் திருமுழுக்கிற்குப் பின் ஒருவர் முதிர்ச்சி அடையும் வயதில் உறுதிப்பூசுதல் என்ற அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்கிறார். திருஅவையின் ஆயர் அவர்கள் கைகளை வைத்து அபிஷேகம் செய்து இந்த அருளடையாளத்தை ஒருவருக்கு வழங்குகிறார். இந்தத் அருளடையாளம் வழியாக ஒருவர் தூய ஆவியின் கனிகளாலும் வரங்களாலும் உறுதிப்படுத்தப்படுகிறார்.

திருமுழுக்கு யோவான் பாவமன்னிப்பு அடையும் திருமுழுக்கை கொடுத்தார். இயேசு திருமுழுக்கு பெற்றது பாவமன்னிப்பின் அடையாளம் அல்ல மாறாக பாவிகளுடன் இயேசு இருக்கிறார் என்பதை உணர்த்துவதற்காக.

இந்நாட்களில் கத்தோலிக்கத் திருஅவையில் பெறுவது திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கு அல்ல, மாறாக மூவொரு இறைவனின் பெயரால் பெறும் திருமுழுக்கு. இதன் மூலம் ஜென்ம பாவம் கழுவப்பட்டு தூய ஆவியினை பெற்றுக்கொள்கின்றோம். எனவே அவர்கள் குழந்தையாக இருக்கும் போது திருமுழுக்கு பெறுவதனால் திருஅவையின் அங்கத்தவர்களாக, ஜென்ம பாவம் கழுவப்பட்டு இறைவனுக்கு உகந்த செயல்களை செய்யும் தூண்டுதலைப் பெறுகின்றனர்.

குழந்தை திருமுழுக்கிற்கு விவிலிய ஆதாரங்களாக புனித பவுல் லீதியாவின் வீட்டினருக்கும், சிறைக் காவலரின் குடும்பத்தார் அனைவருக்கும் திருமுழுக்குக் கொடுத்ததையும் கூறலாம். ( தி.பணி 16:15 - 33) வீட்டார் அனைவரும் எனும் போது நிச்சயமாக குழந்தைகள் இருந்திருக்கக்கூடும். எனவே இவ்வாறாகவும் நாம் ஆதாரங்களை எடுத்தியம்பலாம்.

## இறைவார்த்தை புதையல் போட்டி
## புனித மாற்கு நற்செய்தி
## அதிகாரம் 1-8 வரை

- கீழ்வரும் இறைவார்த்தையின் அதிகாரம், வசனத்தை மட்டும் எழுதுக.
- எல்லோரும் பங்குபற்றலாம்
- திருமலை தீப பத்திரிகையில் வரும் படிவத்தை நிரப்பி அனுப்பவும்.
- போட்டோ கொப்பி பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- சரியான விடை அனுப்புவோர் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.
- பரிசுகள் முறையே 1ம் இடம் 500/=, 2ம் இடம் 300/=, 3ம் இடம்200/=

01. ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?
விடை :.....................................................................

02. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும்.
விடை :.....................................................................

03. ஏனெனில் யோவான் நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான்.
விடை :.....................................................................

04. சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்.
விடை :.....................................................................

05. "அஞ்சாதீர் நம்பிக்கையை மட்டும் விடாதீர்"
விடை :.....................................................................

06. "என்னை விட வலிமை மிக்க ஒருவர் எனக்குப் பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக் கூட எனக்குத் தகுதியில்லை"
விடை :.....................................................................

07. இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு "மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன"
விடை :.....................................................................

08. தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த வீடும் நிலைத்து நிற்க முடியாது.
விடை :.....................................................................

09. நீங்கள் கேட்பதைக் குறித்துக் கவனமாயிருங்கள் நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.
விடை :.....................................................................

10. "ஆண்டவர் உம்மீது இரக்கங்கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்"
விடை :.....................................................................

11. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்.
விடை :.....................................................................

12. என் அன்பார்ந்த மகன் நீயே உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்.
விடை :.....................................................................

13. ஓய்வு நாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை.
விடை :.....................................................................

14. "ஏன் அஞ்சுகிறீர்கள் உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா?"
விடை :.....................................................................

15. நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்
விடை :.....................................................................

பெயர் :.....................................................................

முகவரி :.....................................................................

பங்கு :.....................................................................

**முடிவுத்திகதி : 28.02.2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவினைத் தேடியே

**கவிதை வரிகளை** **Fr. N.C. அருள்வரதன்**

**சரியாக வடிவமையுங்கள்**

முதலாம் இடம் 500/-
இரண்டாம் இடம் 300/-
மூன்றாம் இடம் 200/-

போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்

**இதோ கவிதை வரிகள்**

- உலகையே வருத்தத்திலாழ்த்தியே
- உலகெமெல்லாம் பரவிவிட்ட கொரோனா
- நோய்களென்றும் மரணங்களென்றும்
- எண்ணிக்கைகள் ஏறிக்கொண்டே
- உயர்ந்து கொண்டு செல்வதனால்
- வேதனையின் வடிவங்களே விளைவுகளாகிறதே
- கொடுமையாம் கொரோனா வியாதி
- உலகைப் பற்றிக் கொண்டுள்ள
- உலகினை விட்டு அது
- மறைந்தழிந்து போக வேண்டும்
- இறைவன் துணையாலன்றி
- இது மறைந்து போய்விடாது
- நம் துயர நிலைகள் மறையும் உண்மையே
- இறைவன் நமக்குத் துணையாகவே
- வேண்டுவோம் இறைவனையே ஒன்றாகியே

**இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்**

**முடிவுத்திகதி : 28. 02. 2021**

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் – 42
## எஸ்தர் 6 – 10 அதிகாரம்
## போட்டி முடிவுகள்

**விடைகள்**

| | |
|---|---|
| 01. மகிழ்ச்சியும், புலம்பல் விழாக்கோலமாகவும் | (9:17) |
| 02. ஆடைகளையும், புரவிகளையும் விரைவாய்க் கொணர்ந்து மொர்த்தக்காய்க்கு... | (6:10-11) |
| 03. அரண்மனைப் பூங்காவிற்குள் | (7:7) |
| 04. மொர்த்தக்காய்க்கு | (8:2) |
| 05. பதின்மர் (10) | (9:7-10) |
| 06. மொர்த்தக்காயை ஆமான் வீட்டிற்கு | (8:2) |
| 07. வல்லவரானார், புகழ் அனைத்து மாநிலங்களுக்குள் பரவியது, ஆற்றல் மென்மேலும் வளர்ந்தது | (9:4) |
| 08. 50 முழ தூக்குமரம் | (7:9) |
| 09. அலுவலர் பிக்தானாவும், செரேசும் | (6:2) |
| 10. நம்பிக்கை ஒளியாகவும், மகிழ்வுக்கும் அக்களிப்புக்கும், மதிப்பிற்கும் உரிய ஒன்றாகவும் விளங்கியது. | (8:15-16) |

பங்குபற்றியோர் : 29 குட்டீஸ்
எவரும் மிகச்சரியாக விடை எழுதவில்லை என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

பங்குபற்றிய அனைத்து குட்டீஸ்சுக்கும் நன்றியும் வாழ்த்துக்களும்

## குட்டிக்கதை ஒன்று

**Fr. NC**

செய்யும் தொழிலே தெய்வம்

ஒரு சிறிய கிராமம். அங்குள்ளவர்களில் பலரும் பலவிதமான வேலைகளைச் செய்பவர்கள். அதிலே என்ன சிறப்பென்று பார்த்தால், அவர்கள் என்ன வேலை செய்தாலும் அந்த வேலையிலே குறைகளின்றி கண்ணும் கருத்துமாய் செய்வார்கள் அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் என்ன செய்தாலும் நிறைந்த மனத்தோடு வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். இதிலிருந்து எதை அறியமுடிகின்றது? "செய்யும் தொழிலே தெய்வம் "

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் – 43
## யோபு அதிகாரம் 1–10

01. என் நாவில் அநீதி உள்ளதா, என்று கேட்டவர் யார்?
விடை : ........................................
02. தன் பிறந்த நாளைச் சபித்தவர் யார்?
விடை : ........................................
03. யோபுவுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். இதில் ஒருவர் எலிப்பாசு இவர் எந்த ஊரைச் சேர்ந்தவர்?
விடை : ........................................
04. யாருடைய திட்டங்கள் வீழ்த்தப்படுகின்றன?
விடை : ........................................
05. வானத்தை விரித்தவர் எவற்றை மிதித்து நடந்தவர்?
விடை : ........................................
06. யோபு பலருக்கு அறிவுரை பகர்ந்து எவைகளைத் திடப்படுத்தினர்?
விடை : ........................................
07. யோபுவின் ஒட்டகங்களை மேய்த்தவர் யார்?
விடை : ........................................
08. யாருடைய நம்பிக்கை இழந்து போம்?
விடை : ........................................
09. ஆண்டவர் தன்னை எதைப் போல் வேட்டையாடுவதாக யோபு கூறுகிறார்?
விடை : ........................................
10. அறிவிலியைக் கொல்வது எது?
விடை : ........................................
11. "அமைதி இல்லை அல்லலே வந்துற்றது"கூறியவர் யார்?
விடை : ........................................
12. இறைவன் உள்ளத்தில் ஞானமுள்ளவர் எப்படி இருப்பார்?
விடை : ........................................
13. யோபுவின் உடலைப் போர்த்தியவை எவை?
விடை : ........................................
14. யோபுவின் நண்பர்கள் எத்தனை நாள் தரையில் உட்கார்ந்திருந்தனர்?
விடை : ........................................
15. யோபுவின் வார்த்தைகள் எதைப் போல் இருப்பதாக பில்தாது கூறினான்?
விடை : ........................................

பெயர் :........................................
முகவரி :........................................
பங்கு :........................................

**முடிவுத்திகதி : 28. 02. 2021**

## அர்த்தமுள்ள தவக்காலம் - 05 **Fr. சுரேன். OMI**

**தவக்காலம் ஒரு வரலாற்றுப் பார்வை**

தவக்காலம் பற்றிய சிந்தனைகள், எண்ணங்கள் திருத்தூதர்களுடைய காலத்தில் இருந்தே கருக்கொண்டது. அதாவது இயேசுவின் மரணத்திற்கு பின் அவரது உயிர்ப்பு மற்றும் அவரது விண்ணேற்புக்கு பின்னரான காலப்பகுதியிலே, இயேசுவை அறிவிக்கவும், அவரது துன்பங்களில் பங்கேற்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக உரோமையர் 6இல் கிறிஸ்துவினுடைய உயிர்ப்பு விழாவிற்கு முன் நோன்பிருப்பது என்பது மிகப்பழமையான நடைமுறையாகும். அந் நோன்பிற்குரிய இடைவெளி காலத்திற்கு காலம், இடத்திற்கு இடம் வேறுபட்டதாக காணப்பட்டது. 325ம் ஆண்டு கூடப்பட்ட நீசேயா பொதுச்சங்கத்திற்கு பிறகு தான் தவக்காலம் நாற்பது நாட்களைக் கொண்ட ஒரு காலமாக கருதப்பட்டது.

தெர்துல்லியன் **(Tertullian)** இந்த பாஸ்கா விழாவைப்பற்றிய தனது கருத்தில், கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா தான் திருமுழுக்கு அருளடையாளத்திற்கான உண்மையான புனிதமான நாளாகும் என்று குறிப்பிடுகின்றார். டிடாக்கே (**The Didache** - முதல் நூற்றாண்டுக்கே உரித்தான இந்த பன்னிரண்டு அப்போஸ்தர்களின் படிப்பினை அடங்கிய நூல் ) என்கின்ற நூலிலே திருமுழுக்கு பெறவேண்டியவர் நோன்பு இருக்கும்படி குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

'தவக்காலம்' என்கின்ற வார்த்தை கூட அக்காலத்தின் தன்மை பற்றி விபரித்து கூறுகின்றது. ஆனால் **Quadragesima** எனும் இந்த இலத்தின் வார்த்தை அதன் காலத்தின் அளவைக் குறித்துக்காட்டுகின்றது. இக்காலம் நாற்பது நாட்களைக் கொண்டது எனும் கருத்து தெளிவாகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



01



02

பெயர் :
முகவரி :
தரம் :
பங்கு :

- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02இல் வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - **500/-** 2ம் பரிசு **300/-** 3ம் பரிசு **200/-**

முடிவுத்திகதி : 28.02.2021

## விடுபட்ட எழுத்துப் புதிர்ப் போட்டி - 37

### 1திமோத்தேயு (4-6)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | | | | | | | | பி | ■ |
| | அ | | | | | | ■ | | |
| | | | | | | ந | ■ | | |
| | | கை | | | | | | | |
| | | ■ | தொ | | | | | | |
| | | ■ | | | | | ப | ■ | |
| | | | | | | | | தீ | |
| ■ | | | | | | | | போ | |
| நி | | | | | அ | | | ■ | தா |
| ■ | | | | | | | | | ம |

01. ஆ............க...........க்கு
02. தொ.......... ......... ணா..........
03. அ.........ள்
04. கை...... ........ண்க............
05. போ........ .........களு........ ......ம்
06. நற்........ .........று
07. தீ.........ப்பு........ .........க
08. அடி..... ......த.......
09. ப.........ச்.........ல்
10. ஆ......ய.........தரு.........து
11. ம......நி........வு....... .......வர்.
12. அறி......ன.........ன
13. பி.........ழ்.........து
14. நி........வா.........வை
15. தா......ள......னத்......டு

பெயர் :

முகவரி :

பங்கு :

**முடிவுத்திகதி : 28.02.2021**

## சிறுவர்களுக்கான நிறந்தீட்டுதல் போட்டி

**1ம் இடம்**
அ. அஸ்வின்
இல 45/20,
இலுப்பைக்குளம்,
சாம்பல்தீவு



**2ம் இடம்**
ரி. ரக்ஷயா
இல 75/5,
சமுர்த்தி வீதி,
திருகோணமலை

**3ம் இடம்**
அ. நோர்பட் யுகேஷ்
திருமுழுக்கு யோவான் ஆலயம்
சாம்பல்தீவு

## சிறுவர்களுக்கான நிறந்தீட்டுதல் போட்டி

**1ம் இடம்**
எ.க. மேரிஅனற்திரேசியா குரூஸ்
பாடசாலை வீதி, கருவேப்பங்கேனி
மட்டக்களப்பு

**2ம் இடம்**
யோகநாதன் அபிஷேக்கா
இருதயபுரம்,
மூதூர்



**3ம் இடம்**
றி. சர்மிளா
இல : 529/31, ஏகாம்பரம் வீதி
கேணியடி
திருகோணமலை

## புனித யோவான் நற்செய்தி

### அதிகாரம் 01-03 (முன்னுரை உட்பட)

### போட்டி முடிவுகள்

**பங்குபற்றியவர்கள் :78பேர்**
**மிகச்சரியாக விடையளித்தோர் : 21பேர்**

**1ம் இடம்**
செல்வி. அக்ஸ்சனா சுதாகரன்
புதுக்குடியிருப்பு
தம்பலகாமம்

**2ம் இடம்**
நிஷாந்த் சுபாஷினி
பீலியடி
கன்னியா

**3ம் இடம்**
ஜி. எம். பிரின்சியா
இல 24, இமாம் வீதி,
நாச்சிக்குடா

பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்

“முதியவர்கள் முக்கியமானவர்கள், அவர்களை போக்கிஷமாக நமது குடும்பங்களிலும், சமூகத்திலும், குழுமத்திலும் பேண வேண்டும்”

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# வாழ்த்துகிறோம்! செபிக்கிறோம்.




துறவற வாழ்வில் 40 வருட நிறைவாகிய றூபி யூபிலியைக் (Ruby Jubilee ) காணும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைத் துறவிகளாகிய,

அருட்சகோதரி ஜொய்ஸ்மாறி A.C
அருட்சகோதரி இலேன் A.C
அருட்சகோதரி கிளேரா கிளைவ் A.C
அருட்சகோதரி மேசி ஜஸ்மின் A.C
அருட்சகோதரி ஆன்மேரி A.C

ஆகியோரை வாழ்த்தி இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.
இறைவாழ்விலும், பணிவாழ்விலும் ஊட்டமும், ஆழமும் பெற செபிக்கின்றோம்.



10.01.1981 - 10.01.2021

## இவ்வாண்டில் அகில உலகத் திருஅவை நினைவுகூர்ந்து கொண்டாடும் இரு கருப்பொருள்கள்.

Famiglia Amoris Laetitia
Anno 2021 - 2022




2021 மார்ச் 19ம் திகதி - 2022ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் திகதி வரை
**குடும்ப ஆண்டு**

2020ம் ஆண்டு டிசம்பர் 08 - 2021ம் ஆண்டு டிசம்பர் 08ம் திகதி வரை
**புனித யோசேப்பு ஆண்டு**

2016ம் ஆண்டு மார்ச் 19ம் திகதி புனித யோசேப்பு பெருவிழாவன்று திருத்தந்தை கையொப்பமிட்ட "Amoris Laetitia" ('அன்பின் மகிழ்வு') மடல், இவ்வாண்டு மார்ச் 19ம் திகதி ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு, 2021ம் ஆண்டு, மார்ச் 19ம் திகதி முதல், 2022ம் ஆண்டு உரோம் நகரில் இடம்பெறவிருக்கும் 10வது உலகக் குடும்ப மாநாட்டின் இறுதிநாளான ஜூன் மாதம் 26ம் திகதி வரை கத்தோலிக்க திருஅவையில் 'அன்பின் மகிழ்வு' மடலை அடிப்படையாகக் கொண்டு, குடும்ப ஆண்டு நடைபெறுகிறது. அத்துடன், திருத்தந்தை அருளாளர் ஒன்பதாம் பயஸ் அவர்கள், 1870ம் ஆண்டு டிசம்பர் 08ம் திகதி, புனித யோசேப்பு அவர்களை, உலகளாவிய திருஅவையின் பாதுகாவலராக அறிவித்தார். அந்த அறிவிப்பின் 150ம் ஆண்டையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2020ம் ஆண்டு டிசம்பர் 08ம் திகதி முதல் 2021ம் ஆண்டு டிசம்பர் 8ம் திகதி வரை புனித யோசேப்பு ஆண்டாக சிறப்பிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

குடும்பத்தையும், திருக்குடும்பத்தின் தலைவரான புனித யோசேப்பையும் மையப்படுத்தி நடைபெறும் இவ்விரு கொண்டாட்டங்களையும் 'அன்பின் மகிழ்வு' (Amoris Laetitia) மடல் வழியாகவும், புனித யோசேப்பைக் குறித்து "Patris Corde" அதாவது 'ஒரு தந்தையின் இதயத்தோடு' என்ற தலைப்பில் வெளியிட்ட திருத்தூது மடல் வழியாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வெளிப்படுத்தியுள்ள எண்ணங்களின் அடிப்படையில் எம் கிறிஸ்தவ நம்பிக்கையை கட்டியெழுப்புவோம்.

## புண்ணிய கிராமத் திட்டம்





கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த 13 டிசம்பர் 2020 அன்று தம்பலகமம் புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் பெற்றோர், இளைஞர் - யுவதிகள், மாணவர்கள் ஆகியோருக்காக ஆன்மீக வழிநடத்துதல் கருத்தரங்குகள் நடைபெற்றன. இதில் ஏறத்தாழ 65 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர். இதன் வளவாளர்களாக அருட்பணி டக்ளஸ் ஜேம்ஸ், திரு க. மெலிக்கன்ராஜ், திரு புளோரியன் ஜான்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். தம்பலகமம் பிரதேச செயலகம் இதற்கான அனுசரணையை வழங்கியது.

17 ஜனவரி 2021 ஞாயிற்றுக்கிழமை கப்பல்துறை புனித சமாதான அன்னை ஆலயத்திலும், தம்பலகமம் புனித பாத்திமா அன்னை ஆலயத்திலும் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் தம்பலகமம் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரீபதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். தம்பலகமம் பிரதேச கலாச்சார உத்தியோகத்தர், கிராமசேவையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர். பிரதேச செயலாளர் தமது உரையில் கலாச்சார நிகழ்வுகளை முன்னெடுப்பதினால் ஏற்படும் இணைப்புக்களை எடுத்துக் காட்டினார்.

தம்பலகமம் புனித பாத்திமா அன்னை ஆலயம் கடந்த 2020 டிசம்பர் மாதம் புனரமைக்கப்பட்டது. இது கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் நிதியுதவியுடன் தம்பலகமம் பிரதேசசபையின் வழிநடத்துகையின் கீழ் நிறைவேற்றப்பட்டது.

**தகவல் : அருட்பணி எஸ். ஆர். ஜெயரட்ணம்**
**பங்குத்தந்தை - தம்பலகமம்**


## விற்பனைக்கு வருகிறது......

**புதையல்**

ரூபாய் 600/- மட்டுமே

மறைக்கல்வி நிலைய அருளகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்

க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான
பரீட்சை வழிகாட்டி

# புதையல்




**ஆசிரியர்**
**திருமதி. சுரேந்தினி மணிவண்ணன்**
**தி/புனித சூசையப்பர் கல்லூரி (தேசிய பாடசாலை)**
**திருகோணமலை. 0262227386, 0701232308**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org